KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலா நிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளி வரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 2.] 1929 வரு ஏப்ரல் மீ 4உ [No. 14.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 261
2. ஏமாங்கதத் திளவரசன் (A Novel) T. N. சேஷாசலம் B.A., B.L. 263
3. வில்லி பாரத விளக்கம் T. S. நடராஜப் பிள்ளை B.A., B.L. 265
4. அப்பர் E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L. 267
5. தமிழ்ப் பாடம் 270
6. கம்பராமாயணம் T. N. சேஷாசலம் B. A., B. L. 272
7. மாறன் பாப் பாவினம் (நாராயணசாமி ரெட்டியார் அனுப்பிய பிரதி) 274
8. வர்த்தமானம் 279

சந்தாதாரராய்ச் சேர விரும்புவோர் எந்தத் தேதியிலிருந்து சேரலாமாயினும் கட்டுரைகள் பல தொடர்ச்சியாய் வருவதால் முன்னிதழ்களையும் பெற்றுக்கொள்வது நலம். வி. பியில் அனுப்பச் சொல்வதைக் காட்டிலும், தொகையை மணியார்டர் செய்வதால் செலவு குறையும். ஸிங்கப்பூர் பினங்கு தென்னாப்பிரிக்கா முதலிய புறநாடுகளுக்கு வி. பியில் அனுப்ப இயலாது. மானேஜர்.

## கலா நிலயம்

### வள்ளுவர் வாய்மை.

I

"வாய்மை எனப்படுவது யாதெனின், யாதொன்றுந் தீமை இலாத சொலல்" எனத் திருவள்ளுவநாயனார் தம் தெய்வப் புலமையால் வகுத்த வாய்மையின்இலக்கணம் ஏற்றுக்கொளற்பாலதன்று என அறிஞர் ஒருவர் சின்னாட்களுக்குமுன் ஓர் அவையின்கண் மறுத்துப் பேசினாரென்று பத்திரிகைகள் வாயிலாகத் தெரியலாகின்றது. இதுவன்றி இன்னும் சில குறள்கள் அந்நூலினின்று விலக்கவேண்டியன உளவென்றும் அவர் கூறினாராம். அன்னார் என்னகாரணங்கள் காட்டி இன்னபடி கூறினாரென்பது யாம் கண்ணுற்ற பத்திரிகைகளினின்று தேர்தற்கியலாமையால், அவ்விடயத்தை இங்கு ஆராய நினைத்திலேம். திருக்குறள் நூலி னுள்ள மற்றக் குறள்களுக்கு எக்கதி நேரினும், "மாந்தர்க்குக் கற்றனைத்து ஊறும் அறிவு" என்னுங் கொள்கையை யாவரும் மறுக்கமாட்டார் எனத் துணிந்தெழுத எம் கை பாய்ந்தது. ஆனால், இற்றைநாள் ஒருசாரார், அறிவு ஊறுதற்குக் கல்வி எத்துணையும் வேண்டாவென இயம்பிவருதல் எம் நினைவின்கண் எழுகின்றதாதலால் உற்ற துணிவைச் சிறிது போக்கி ஓய்வதல்லால் வேறு நாம் இயற்றுதற்கி யாதுளது! இப்பின்னைய பெற்றியோர் இக்குறள் திருவள்ளுவர் நூலில் இருப்பது தெரிந்துதான் தகைகின்றனரோ, அல்லது அஃதும் தெரியாமலே அக்கருத்தினை மாத்திரம் மறுக்கின்றனரோ வென்பது அறிகிலேம். எவ்வாறாயினும், "தொட்டனைத்து ஊறும் மணற்கேணி, மாந்தர்க்குக் கற்றனைத்து ஊறும் அறிவு" என்ற பொய்யாமொழியின் உறுதியை நம்புவோர்க்கு ஒன்று இன்று உரைக்கலாம்.

எத்துணை நாம் கற்றபின்னும் அறிவின் எல்லையை எட்டிவிட்டோம் என்று எண்ணுதற்கில்லை. கல்லாதது உலகளவு எந்நாளும் எஞ்சியே நிற்குமென்றால், அறிவின் குறைவும் அன்னதே. நாம் கற்றுள கல்வியின் முதல்நலம் யாதெனில், நம்மினும் மிகக் கற்றவர் திறத்தைத் தெரிந்துகொள்வதற்குரிய உதவியைத் தருதலாம். இவ்வுதவியினைப் பயன்படுத்திக்கொள்ள மனமுண்டெனின் இங்குள நம்மனோர் யாவரினும் திருவள்ளுவநாயனார் மிகமிகக் கற்றவர் என்பதை எளிதில் உணரலாம். அஃதுணர்ந்தவுடன், அறிவினும் அவர் நம்மிற் பன்மடங்கு மிக்கவர் என்பதை ஒவ்வுதல் இன்றியமையாததாம். ஆயின், அவரும் அவரனைய பொய்யில் கேள்விப் புலமையினோர் பிறரும் அருளிய மொழிகளைப் பழுதுரைத்து விலக்க முனையுமுன், ஒருகால் அச்சொற்களின் மெய்ம்மையை உணர்தற்கேற்ற அறிவினது ஆற்றல் நாம்தான் இன்னும் பெற்றிலமோ வெனக்கருதி அஞ்சுபவராவோம் என்பதற்கையமில்லை. நெடுந்தூரம் நின்றேனும் அவர்களோடு ஒப்பு நோக்குதற்குரிய கல்வியென்பது நம்மிடத்தில் இருக்குமெனின் நாம், "கற்றனவெலாம்

எற்றே இவர்க்கு" என்று அடங்குவதல்லால், மற்றொன்று சொல்லி அவர் உரையை மறுத்தல்வேண்டுமென எண்ணுவதும் இயற்கையன்று.

யாதொன்றும் தீது இலாத சொலல், உண்மையின் உறுதியாமோ என அயிர்த்தல் முற்றிலும்ஆதாரமற்றதோர் ஐயம் என நாம் நிலைநிறுத்த நினைத்திலம். எந்நிலையிலும் யாவர்மாட்டும் எதன்பொருட்டும் வாய்மை பிறழ்ந்துசொல்லித் தீதுஇலாத ஒன்றைச் சாதிக்க இயலுமென்பது அயிர்த்தற் பாலதே. இப்பொய் உரைத்தாலன்றித் தீது நேரும் என நாம் மதித்த கருமம் எண்ணியவாறு முடியாமல் பிழையாயினும் ஆகலாம். இக்குறளால், "நிகழ்ந்தது கூறலென்பது நீக்கப்பட்டது.அது தானும் தீங்கு பயவாதாயின்மெய்ம்மையாம், பயப்பிற் பொய்ம்மையா மென்பது கருத்து" எனப் பரிமேலழகர் எடுத்துக் காட்டுகின்றனர். இக்குறளிற்குப் பின்வருகின்ற குறள், "பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த நன்மைபயக்குமெனின்" என்பதாம். அதனைப் பரிமேலழகர், "குற்றந்தீர்ந்த நன்மை—அறம்; அதனைப்பயத்தலாவது கேடாதல் சாக்காடாதல் எய்த நின்றதோர் உயிர் அச்சொற்களின் பொய்ம்மையானே அதனினீங்கி இன்புறுதல். நிகழாதது கூறலும், நன்மை பயவாதாயிற் பொய்ம்மையாம்; பயப்பின் மெய்ம்மையாமென்பது கருத்து. இவையிரண்டு பாட்டானும் தீங்கு பயவாத நிகழ்ந்தது கூறலும், நன்மைபயக்கும் நிகழாதது கூறலும் மெய்ம்மையெனவும்; நன்மை பயவாத நிகழாதது கூறலும், தீங்குபயக்கும் நிகழ்ந்தது கூறலும் பொய்ம்மையெனவும் அவற்றதிலக்கணங் கூறப்பட்டது" என விளக்கிவைக்கிறார். நிகழ்ந்ததைக் கூறுமலும் நிகழாததைக் கூறியும் நலம் பயத்தற்குரிய நிலைகள் ஒன்றிரண்டு அவர் உதாரணமாய்க் காட்டியிருந்தால் நலமாயிருக்கும். பகைவன் ஒருவனால் கொலைகொண்டு துரத்தப்பட்ட ஒருவன் ஒளிந்தவிடம் தெரிந்திருந்தும், "யான் துரத்திய அவன் எங்கு ஒளிந்துளான் அறிதியோ" என அப்பகைவன் வினவியகாலையில் "அறியேன்" எனச் சாற்றி ஒளிந்தவன் உயிரைக்காத்தலே வாய்மையறம் எனச் சிலர் உதாரணங் காட்டுவர். இதனையும் இதுபோன்ற பிற உதாரணங்களையும் மேல்நோக்காகப் பார்க்குங்கால், அது தீமையிலாத சொலல்' என்றும், அதனால் 'புரைதீர்ந்த நன்மை பயக்கு'மென்றும் தோன்றலாம். பெரும்பான்மை அதன் தன்மையும் அன்னதே. எனினும் சிற்சில சமயம் இத்தகைய பொய்யினால் விலக்க நினைத்த தீமையிலும் அதிகமான தீமைகள் விளைய நேரினும் நேரலாமே. எவ்வாறெனச் சிறிது பார்ப்போம். ஒளிந்ததைப் பார்த்திருந்தவன் 'அறியேன்' எனக்கூறியதால் துரத்திவந்தவன் அகல்வானெனினும், அவன் சாந்தமடைந்து கொலையினிச் செய்வதில்லை எனத் தவிர்ந்து போவானல்லன். 'கைக்கெட்டியவன் என் கத்திக்கு எட்டவில்லையே' என்று வெஞ்சினம் மனத்தில் மூளமூள, 'நாளை நா னவனைவிட்டேனே, பார்" என்று வஞ்சினம் உரைத்தே மீள்வான். ஒளிந்திருந்தவனும் "யான் துணையின்றி இருந்ததாலன்றோ அவனென்னைக் கொலை கருதித் துரத்தத் துணிந்தனன். நாளையே நான் பதின்மர் உதவியோடு சென்று அவனைக் குலத்தோடுந் தொலைக்காமல் தீரேன்", என விரதம்கொள்வதும் இயற்கையே. அவ்வாறே பதின்மரோடு உருத்தெழுந்து வருமிவனை அவனும் பதின்மரைச் சேர்த்துக்கொண்டுஎதிர்க்கப்புகுவான்.இப்பூசலில் இருதிறத்தோரும் மாள்வதும் இயலும். எனின் ஒருவனுயிரைக் காத்தற் கியன்றதென மதித்துரைத்த அம்முதற்பொய், அதனையும் காவாமல் இருபதின்மர் உயிரிற்கு இறுதிசெய்த தீமையைத் தாங்கிநிற்கக் காண்கின்றோம். இவ்வாறன்றி முதலிலேயே ஒளிந்தவிடம் தெரியுமென மெய்யைச் சொல்லியிருந்தாலே ஒரு தீதும் நேராததற்கும் இடமுளது. "ஆம், அறிவேன். நீ தேடிவருபவன் என் வீட்டினுள் மறைந்திருக்கின்றான்" அல்லது, "அப்புதருள் ஒளிந்திருக்கின்றான், சென்று பார்" என்று கண்டிருந்தவன்உண்மையை உரைத்தாலும், தொடர்ந்துவந்த பகைவன், "இவனேது என்னைப் பரிகசிக்கின்றான் போலும்" என்று அகன்றுவிட நேர்வதும் புதுமையன்று. அச்வத்தாமன் எய்த அபாண்டவாஸ்திரத்தினின்று பாண்டவர்களைக் கண்ணபிரான் ஒரு முனிவனைக் கொண்டு மெய்யே சொல்வித்துத் தப்புவித்த பாரதக் கதையொன்று சிலர் கேள்வியுற்றிருப்பர். அக்கதை வியாதருடைய நூலில் காணவில்லை என்று நினைக்கின்றோம். எனினும், வாய்மைக்கு வாய்மையும் வழுவாது, ஒளிந்தவன் உயிரிற்கு உயிரும், அப்பொழுது தீங்கென்று தோன்றிய ஆபத்திலிருந்து, காக்கலாகும் விதத்தை அக்கதை காட்டுகின்றது.

இனி, ஒளிந்திருக்கும் இடத்தை உண்மையாகக் கூறிப் பின் அவ்விருவருக்கும் உள்ள பகையின் காரணத்தை வினவி, அது ஆதாரமற்றதென்று காட்டினும், ஆதாரமிருப்பினும் கொல்லாமை முதலிய அறங்களைப் போதித்தேனும் பகைகொண்டு வந்தவன்தன் சினத்தை ஆற்றி அவனை நல்வழிப்படுத்தி இருவரையும் பகைதீர்ந்த நண்பராய்ப் பார்த்திருந்தவனால் ஆக்க இயலினும் இயலும். ஆதலால் அவன், தீமையிலாத சொல் இங்குப் பொய்யுரை யென மதித்ததால் வாய்மையச் செப்பி நிரந்தர நன்மையைப் பயக்கவல்ல வொரு செவ்வினைக் கைவிட்டவனாகின்றான்.

இவைகளையெல்லாம் நன்கு ஆய்ந்து சிந்திக்குங் காலையில் வாய்மையால் விலக்க இயலாத தீமையைப் பொய்ம்மையால் விலக்குவதென்பது இயலுமோவென்றும், புரைதீர்ந்த நன்மை பயந்து பொய்ம்மை வாய்மையிடத்தவாதல் அநுபவத்தில் நேருமோவென்றும் அயிர்ப்பார் காரணமின்றி அயிர்ப்பவர் அல்லர் என்பது நிச்சயம். இந்நிலையில், பரிமேலழகருடைய உரை வேறொரு பொருளிற்கு இடந்தரவில்லையாயினும், இவ்விரு குறட்பாக்களின் அமைப்பு நாயனுருக்கும் அத்தகைய ஐயம் சிறிது விளைந்ததோ என்றெண்ணும்படி இருக்கின்றது. 'யாதொன்றும்' என்றும், 'புரைதீர்ந்த' என்றும், இவ்விரு குறள்களிலும் வந்துள சொற்களின் நிலையை நாம் மேனோக்கிச் செல்லலாகாது.புரைதீர்ந்த நன்மைபயக்குமெனின்,பொய்ம்மையும் வாய்மைஇடத்த' என்றசொற்கள், "பொய்ம்மை சிறிது நன்மை பயப்பதுபோல் முதலில் தோன்றினாலும், அந்தத்தில் அது பயந்தநன்மை புரைதீர்ந்ததாய் இராது. ஆதலால் பொய்ம்மை ஒருநாளும் வாய்மை இடத்ததாகாது" என்ற கருத்திற்கும் இடந்தரும். "மாண்டார் வருவாரெனின், விழுந்து புரண்டு அழுவதாற் பயனுண்டு" என்ற வாக்கியத்திலுள்ள சொற்களின் அமைப்பைப்போல் இக்குறளின் சொற்களும் அமைந்துள்ளன. மற்றைய குறளின் 'யாதோன்றும்' என்ற சொற்களும் அவ்வாறே "பொய்யால் சிலர்க்குறும் தீமைகளைக் காக்க இயலும் என்று தோன்றினாலும், விலக்கக்கருதிய ஒரு தீமைக்குப் பதிலாய்ப் பலதீமைகள் பொய்யினால் விளைந்து முடியும். ஆதலின் வாய்மை ஒன்றே யாதொன்றும் தீமையிலாத சொல் ஆகும்" என்றபொருளைத் தரக்கூடியனவாய் நிற்கின்றன. இதற்கிணங்க அக்குறட்பாவை, "யாதொன்றும் தீமையிலாத சொலல் எனப்படுவது யாதெனின் வாய்மை" என மொழிகளைச் சிறிது பிரிதுக்கூட்டி ஓதுவோமாயின் நாம் உரைத்த பொருள் கிடைக்கும். மற்று மொழிகளைப் பிரித்துக்கூட்டாமல் அக்குறள் இருக்குமாறே ஓதுவோமாயினும், யாதோன்றும் என்ற சொற்களின் நிலையினால் இப்பொருளே தோன்ற இடமுளது. (தொடரும்)



OFFICE OF THE R... MADR...

# ஏமாங்கதத் திளவரசன்

[By Kind Permission of Messrs. B. G. PAUL & Co., Madras]

## 3. விந்தை வலவன்

247 பக்கத் தொடர்ச்சி

சாபாலனது புன்கவியும் புஜங்கனது துன்மதியும் ஒருங்கு சேர்ந்து சாலக் கலக்கியபகையால் கடாரத்திறைவன் விடுத்த படையும் கானும் மலையும் கடுஞ்சுரமும் கடந்து மிடைந்தது. கார்கள் ஊர்ந்தவெனக் கரிகளும், கிரிகள் பெயர்ந்தவெனத் தேர்களும், கடலோ கிளர்ந்ததெனக் குதிரைகளும்,வெற்றியே நடந்ததென வீரர்களும் செறிந்தஅந் நால்வகைச்சேனையும் முரசதிர் ஓசையால் விண்கிழியவும், மிதித்ததொரு மொய்ம்பினால் மண் நெளியவும் ஏமாங்கத நாட்டின் எல்லையுட் புகுந்தன. அச்சேனைத் தலைவனும் சரபசூரனிற்கருகே புஜங்கனும் சிறிது மகலாது போந்தனன் பகைப்படை தன்னொடு உறவாடிப் புஜங்கன் தம் நாட்டிற்குள் வருவதை எல்லைதுருவிய ஒற்றர் கண்டவளவிலே விரைந்தோடிச் சிங்கமுகனுக்குத் தெரிவித்தனர். அவ்வேந்தனோ தனது ஏவலில் சென்ற புஜங்கன் கடாரத்திலிருந்து பகையே வாங்கி வருவானென்று மதித்திருந்தனன் அல்லாது அத்தேயச் சைனியத்தை நடத்திவருவானென்று நினைத்ததில்லை. எனவே ஒற்றர் கூறியன கேட்க அவன்மனம் அமைதி யிழந்தது. புலிப்பேப் பிடித்தாடிய புஜங்கன், புவனேச்வரனுடன் நட்பேகொண்டு தன் தேயத்தை அவனுக்குக் காட்டிக்கொடுக்கக் கருத்துட் கொண்டிருப்பினும் இருக்கலாம். இவன் கடாரத்திற்குச் சென்று சமர்செய நியமித்து வந்து, பின் படை திரட்டிப்போய் அந்நாட்டை வென்று ர்க்கக் கொள்வதென்றும், கொண்ட அதனை அவனே ஆண்டு சிங்கமுகனுக்கு அடங்கா திருப்பதென்றும், அதற்காகச் சிங்கமுகன் அவன்மேல் தண்டுகொண் டெழுவதென்றும், எழுந்து அச்சமரில் தானே தோல்வியடைந்ததுபோல் பாவிப்பதென்றும், பிறகு சமாதான உடன்படிக்கையின்படி கடாரநாடு புஜங்கனதாகத் தீர்வதென்றும், இப்படிச் சுற்றிச்சுற்றிச் சுய உரிமையில் வேந்தனாகிய அவன், தன் மகளைச் சமநிலையில் வாசவனுக்கு அளிப்பதென்றும், இந்தத் தன்மையதான கபடநாடகத்தினால் புஜங்கன் பஞ்சரவல்லி அசோகவதி வாசவன் சிங்கமுகன் ஆயினோர் ஐவரது மனோரதங்களும் வழுவின்றிச் சித்திபெறச் செய்வதென்றும் அல்லவோ, அரசனும் அணித்தலைவனும் ஆதியில் தமக்குள் சங்கேதம் செய்துகொண் டிருந்தனர். மற்று, மாற்றான் படையுடன் புஜங்கன் இன்று மண்டிவருவது அயிர்த்தற்கு இடமானதே. மாறிய இச்சந்தர்ப்பத்தில் என்ன செய்வதென்று அரசனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. 'சென்ற இடத்தில் யாது நிகழ்ந்ததோ! புஜங்கனது உட்கருத்து என்னவோ! என்னுடன் மாறுபட எளிதில் எண்ணுனே யவன்! கடாரத் தரசனைத்தான் வஞ்சிக்கின்றானே! என்னைத்தான் வஞ்சிக்கின்றானே! யான் எதிர்த்து அடர்க்கப் புறப்படவோ! உண்மையாய் உற்றநிலை உணராது நானிது செய்திடின் அவன் வகுத்த சூழ்ச்சி பழுதாமோ ஒருவேளை!" என்று இவ்விதமெல்லாம் சிந்தித்துச் சிந்தித்துச் சிங்கமுகன் சில தினங்கள் பகைவர் தன்னாட்டிற்குள் புகுவதைத் தடுப்பதற்கொன்றும் முயலாமலே இருந்துவிட்டான். செய்வதற்கொத்த செய்கையின் தன்மையை இவன் மந்திரிமார்களுடன் ஆராய்வதும் இயலாவகையாய் முடிந்தது. பொய்யினால் நலம்புகும் என்பதுமுயற்கொம்பே, என்று முன் புஜங்கனை இடித்துரைத்த மன்னவன் அந்தத் தூயதத்துவத்தைத் தானேமறந்து பொய்ப்பகை தூண்ட அவனை ஏவியதும், பின் போலிச்சமர் இழைக்கநினைத்ததும் ஆய கரியமையில் கோல்தோய்த்து விதியே தீட்டியவொரு சித்திரம் இதுவென அறிவின்மிக்க அமைச்சர்தாம் எடுத்துக்காட்டாது அமையார். மருந்தென நினைந்து நஞ்சினை அருந்தியே நமன் வரவஞ்சி வினையெது உளதெனத் திகைத்திடும் ஒருவனேபோல் வேந்தனும் சஞ்சலமுற்றுத் தளர்வெய்தினன். மாற்றான் படைநிகர் படை தன்வயின் குறைந்ததாலன்று. வன்மைக்கு எதிர்வன்மை வழங்குதற்கு இன்மையாலன்று. போர் தோற்றுப் பாரிழக்கும் பயத்தினாலன்று. வேந்தன் இவன் வருந்திய வேதனையெல்லாம், கபடன் ஒருவன் விரித்த வலையில் பட்டதொரு பரிபவத்திற்கே யாம்.

மாது சொற்கேட்டு மறுதினம் வானரங்களைத் துரத்திவைக்க வாக்குரைத்து மீண்ட வீரச்செம்மலும் அரண்மனையின் மதில்கடந்து உட்புகுங்காலத்தில், வதங்கிய மனத்தனாகி வேந்தன் மாளிகையைச் சூழ்ந்த பொழிலூடே செய்குன்று ஒன்றிற்கருகில் பளிங்குப் பீடத்தின்மீது அமர்ந்திருந்தான். பலநாள் இழந்த பொலிவு ஒருசிறிது பெற்ற முகத்தினனாய் வாசவன் அவ்வழி யேக, அரசன் அவனைக் கூவி, "மைந்த, எங்குப்போய் வருகின்றனை? நின்முகம் தெளிந்திருத்தலால் உவகை யெய்தினேன்," எனப் பகர்ந்தனன். வாசவன், மன்னவன் முகத்தை யுற்று நோக்கி. "வேந்தே, நின் முகத்தொளியை யான் கவர்ந்துளேன் போலும்! எந்தாய், திருவதனம் வாடியிருப்பதேன்? என்னைப்பெற்ற பாவமோ!" என்று இரங்கினான்.

"புண்ணியத்தின் பெரும் புண்ணியமே, புதல்வா, இவ்வண்ணம் இயம்பேல். வாசவ, என்மனத்தில் இப்பொழுது ஒரு ஐயம் புகுந்து வறுக்கின்றது. உண்மையை நீ உரைப்பாயாயின் அஃது ஒருவேளை விலகுவதாகலாம். சொல்வாய்கொல்?"

'வாய்மை மாறி யான் நின்பால் எந்நாளும் ஒழிகியதுண்டோ?' என எதிர்மொழிய வாயெடுத்த வாசவன், புஜங்கன் செப்பிவந்த படுகொலைச் செய்தியை இதுகாறும் உரைக்காது தாழ்ந்திருந்தபடியினாலும், அரசனிவனைப் பஞ்சரவல்லியைக் காண்பதொழியென விதித்துள விதிக்கு யாருக மறுநாளும் அவளைச் சந்திக்கச் சிந்தித்தபடியாலும், எழுந்த அம்மொழிகளை மீண்டும் விழுங்கித் தலைகவிழ்ந்து நின்றனன். ஆதலால் கொற்றவன், "குமர, பொய்யுரை நின்பால் யான் ஒருநாள் கண்டுளன்போல் இன்று உன்னை மெய்யுரை இயம்புவாயோ, என வினவிப் பிழைசெய்தேன். என்மனம் கலங்கியுள்ள காரணத்தினால் நாவும் தடுமாறியது; மைந்த வருந்தேல். உண்மையை நீ உணர்ந்தவனாயின் நான் கேட்கும் முன்னரே வந்து உரைத்திருப்பாய், திண்ணம்," என்று தேற்றினான். இதனினும் வலியதோர் வசை இவ்விளவற்கு எங்குளது! 'தூயவன் நானெனக் கொள்ளும்

இத்தந்தைக்கு வாய்மையைக் கரந்துவைத்த கபடனேன் உய்வெனே,' எனத் தன்னுள் பேதுற்றுப் "பெரும, புஜங்கன் நம் நகர்விட்டு அகன்றனன். அவன் கருதிப்போயுள கருமம் அறிவாயோ? ஆயின், உண்மை ஒளியாது என்பால் நீ உரைக்க வேண்டுகின்றேன்,'' என்று கேட்டான் வாசவன்.

"போயின கருமம் அறிவேன், மைந்த, மற்றவன் வந்துள விதந்தான் கவலை விளைக்கின்றது.''

"ஆயின் புஜங்கன் வந்து சேர்ந்தனனோ?''

"வந்தனன்...........சேர்ந்திலன்.''

"எந்தாய், மருள்தரும் இம்மொழி தேர்ந்திலேன்.''

"வாசவ, இச்சமயம் புஜங்கன் பகைவர்தம் படையொடு நம் நாட்டினுள் புகுந்து வருகின்றான் என்றால், நீ யாது நினைப்பாய். நம்பால் அவன் பகைகொள்வதற்கு ஏதேனும் ஏதுஉண்டோ! நட்பினால் அவன் அவ்வாறு வருதலும் அமையுமோ! அவனது கருத்தின் போக்கை நான் அறிந்ததில்லை.''

"வேந்தே, பாராளும் பேரவா பிடித்துழலும் புதியதொரு பேயன் இப்புஜங்கன். நல்லாற்றில் பெறுவதெனும் நியதியும் அவன் மதித்துளன் என்று எண்ணவோ இடமில்லை.''

" என்று! எவ்வாறு! அறிந்தனையோ இதனை நீ! வாசவ, அறிந்துமதை எமக்கு முன்னரே அறிவிக்காதிருந்ததன் காரணம் என்னவோ!'' என அரசன் மனஞ்சலித்து உரைத்தான்.

"மன்னவா, இவ்விதம் நீ கடாவவும் அதற்கு நான் தகுந்த உத்தரம் தேடவும் ஒருநாள் நேர்ந்திடும் எனும் சங்கை என்மனம்விட் டகலாது குடிகொண்டிருந்தது. எனினும் ஐய, சென்றது கருதிக் காரியமில்லை. மேல்சேர்வது நினைப்போம். இன்றைக்கும் யானறிந்த செய்தி வெகு சிறிது. சரிவரத் தெரிந்திடாது சந்தேகத்தை உரைக்கப் புகின் அது புறங்கூறல் ஆகுமே என அஞ்சி இந்நாள்வரை நின்பால் ஒன்றும் இயம்பாது இருந்தேன்.''

"ஆதலால், இளைஞ, உன்னுள்ளத்தில் ஒரு பொருள் இதுகாறும் யானறியாது கிடந்தது. இந்தத் திருட்டுறவு உனக்கும் புஜங்கனுக்கும் புகுந்திருந்ததென்று எண்ணிலேன். பிறர் மொழியக் கேட்பினும் இதனை மெய்யெனக் கொண்டிரேன்.''

"எந்தாய், சிறு பிழைக்குப் பெரும் பேரிட்டுப் பழிப்பதேன்! அடைவதற் கரியவோர் அருந்தனத்தை இழக்க நேரிடுமோவெனும் அச்சத்தால் எனது உள்ளத்தைச் சிறிது ஒளித்து வைத்தது உண்மையே. ஆயினும் என்! நானே முன்வந்து தானைக் கூறிவிட்டே னென்றபின் இக்கரவில் குற்றமேது? ஐயத்திற்கு இடமேது!''

"வசையே உற்றாய் வாசவ, சிறியதோ பெரியதோ வசையே உற்றனை. எனினும், மைந்த, இது தீரும் வண்ணம் எனக்கு யாது செய்துவைப்பாய்?''

"நின்னாணை ஏவியவழி நிற்பல்.''

"அக் கைதவக் கள்வனைக் காலில்தளைபூட்டி எம் முன் நிறுத்த வல்லையோ நீ!''

"முயற்சி யெனது. முடியுமாறு உணரவல்லார் யாரே. ஆயினும், ஆருயிர்த்தந்தாய், ஒன்று யான் நின்வயின் பணிந்து வேண்டுவேன். அவ்வரம் அடியனேற்கு......''

"பஞ்சரவல்லியைப் பெற்றளித்தவன், மற்ற விதத்தில் பாதகன் ஆனாலும் எனதாணையால் தலைதுறக்க நேரிடாது. இதுவே நீ வேண்டும் வரமாயின் கேளா முன்னம் கொள்க.''

"பெரும, நின் வாய்மையும் வண்மையும் இன்னவாக, ஆயிரம் புஜங்கன் ஒன்றுசேர்ந்து மறைந்தும் எதிர்வந்தும் மாறுகொண்டாலும் எந்தாய், தீங்குதான் தீண்டுமோ நின்னடிகளை! கொற்றமே மேவிய நின் கொடிகுலுங்குமோ! வெற்றிக்குக் குறைவெய்துமோ!''

"தந்தையைப் புகழும் மைந்தர் இவ்வுலகின்கண் பெரும்பான்மை இலர். எனது வெற்றியும் வண்மையும் வியக்கும் இச் சொற்பொழிவெல்லாம் நின் காதலிபால் உள்ள ஆசையால் விளைந்தவென்று உணர்வேன். இளையோய், அதனால் எனக்கு மகிழ்வேயன்றி அயலில்லை. இது கிடக்க, மைந்த, கடாரப் படையுடன் புஜங்கன் நம் நகர்நோக்கி வருகின்றான் எனும் வதந்தி எமக்கு எட்டியுளது. நீ நாற்படை நடத்திச்சென்று அப்புல்லனைப் பொருது வென்று தேர்க்காலில் பிணித்துருட்ட வல்லையாயின் நாளையே போர்க்கோலம் கொண்டெழுந்து புகழொடு பழியும் வாங்கி வருவாய். காதல் மைந்த, நின் கருத்தியாது?''

"திருவுளம் அதுவேயாயின் செல்வேன். நின் ஆணையே எனக்குப் போர்த்துணையாய், நீ தரும் ஆசியே என் மார்க்கவசமாய் அமையும். ஐய, வெல்வது விதிவசம் எனினும் இவைகடந்து நின்மகனைக் கொல்பவன் கூற்றுவனுமாகான்.''

"உயிரினும் இனியாய். படைப்பயிற்சி பெரிதுமிலாச் சிறியன் ஆவாய். எனினும், நீ விழைந்த அப் பெண்மைக்கரசியின் பூசாபலத்தையே உனக்குக் காப்பாக்கிப் போர்க்கனுப்பத் துணிந்துளேன். அவ்வற்ப[illegible] எதிராக யானே சென்று அடர்ப்பது எவ்வ[illegible]!''

"ஆம், தன்னடிமைப் படைத்தலைவனோடு தானே போர்புரிவது மன்னவர்பெருமைக்குப் பொருந்தாது. சிறிய இடத்தும் செம்மை திறம்பா நின்செயல் சீரிய.........''

"மேன்மேலும் மைந்த எமக்கு நீ முகமன்கூறுவது அழகிதன்று. இனியுனக்கு விடை நல்கினேன். நித்திரை அமருமுன் நின்னன்னையைக் குறுகி அருளோடு அவள்தரும் ஆசியும் பெறுதி,'' என்று மன்னவன் முடித்திட இருவரும் மாளிகை யடைந்தனர்.

மறுநாட்காலை, யானைப்பிடரில் போர்முரசு ஏற்றி வள்ளுவர் கடிப்பு அறைந்தனர். அறையக்கேட்ட நகரமாக்கள் இளையோரும் முதியோரும் ஆடவர் பெண்டிர் இருபாலாரும் எங்கெங்கும் குழுமிப், 'போரேது, பகையாவன், படையெங்கே,' என வினவித் திகைப்பவர் ஆயினர். இத்தகை மாந்தரை இடைவிலக்கி வள்ளுவன், " கடிநகர் வாழும் காளையீர் கேண்மின், கடாரக்குறும்பர் எமபுரத்திற்கு வழிகேட்க நும்பால் வருகின்றனர். தூரம் அதிகமாதலால் நும் கைச்சூலத்தால் உறவுறக் காட்டி அவர்தமைஆற்றுப்படுத்த விரைவின் எழுமின். கோனாணை, நீவிர் படைதிரண்டு இன்றுபிற்பொழுது புறநகர் மருங்கில் கூடுதல்வேண்டும். மேற்செய்வன வேந்தனது வாயினின்று உணர்வீர்'' எனச் சாற்றுவதும், அது கேட்டோர், " வாழி வாழி எம்மிறை வாழி, வாய்மை மாறா மன்னவன் வாழி, கொற்றந்தான் பெற்றெடுத்த கோவேந்தன் வாழி வாழி''என ஆரவாரம் செய்வதுமாய் இராசமாபுரமடங்கலும் இடையறாத் தமரம் தழைத்தது. முற்பகலெலாம் இவ்வாறு செல்லப், பிற்பகல், நாற்றிசையிலிருந்தும் கலினத்தைமென்று விலாழி உமிழும் கந்துகங்களும், வண்டு கிண்டிய வாய்வழி மதம்பொழியும் வாரணங்களும், அவை இரண்டும் குழப்பிய சேற்றிலே புதைந்துருண்ட தேர்களும், அழியும் உடலைவிற்று அழியாப் புகழ் எய்துவான் முந்திய வில்லாட்களும், சாரிசாரியாய் அணியணியாய்ப் பந்திபந்தியாய் வரிசைவரிசையாய் வந்து, முந்நீர் கிளர்ந்தன்ன குழுமிய தழுனியினளவு உரைக்கற்பாலதன்று. இடியும் இடைதர வீரர் வெருட்டினர். காளம் கறங்கின. சங்கம் ஏங்கின. பேரிகை யதிர்ந்தன. பல்லியம் எங்கும் பம்பி ஆர்த்தன.



# வில்லி பாரத விளக்கம்

## ஆதி பருவம்

திரௌபதி மாலையிட்ட சருக்கம்.

மதலையைப் பெறுநாட் டுன்பம்
வளர்த்திடு நாளுந் துன்பம்
விதலைநோ யடையிற் றுன்பம்
வியன்பரு வத்துந் துன்பம்
கதமுறு காலர் வந்து
கைப்பற்றிற் கணக்கிற் றுன்பம்
இதமுற லெந்நாள் சேயா
லெற்றைக் குந்துன்ப மானல்

என்று குசேலர் சொன்னபடி பிள்ளையைப் பெறுபவர்க்கு என்றைக்கும் அவலமும் கவலையுமே நீங்காத் துணைகளாகின்றன. அதனினும் பெண்ணைப் பெறுபவன் இவர்களிற் பதின்மடங்கு தெருமருகின்றான். யாகசேனன் அருச்சுனனுடைய விற்றிறத்தை ஆரக் கண்டு வியந்து, அவனையே தன் மருகனாக அடைய வேண்டுமென்று நோன்புநோற்றுத் திரௌபதியைப் பெற்றெடுத்தபின், அவளுக்குரியவனான பார்த்தன் தீப்பற்றி யெரிந்தான் எனக்கேட்டு உள்ளமுடைந்தான். பிறகு, அமைச்சர் முதலாயினோர், அவள் வரத்திற் பிறந்தாளானபடியால் அவளுடைய வரம் பொய்க்காதென்றும், அசரீரி சொன்னவாக்கும் பழுதடையாதென்றும் சொல்லக்கேட்டு அவன், ஒருவாறு தேறிப் பின்னுலூகமாமுனி பாண்டவர் மாண்டிலர் என்று சொன்ன மொழிகளா லுறுதியடைந்து தான் பயந்த நங்கைக்குச் சுயம்வரமென்று தன் நாடெங்கும் முரசறைந்து, புறநாடுகளுக்கும் அவ்வாறே ஓலைபோக்கினான். இதைக்கேட்ட மன்னர்குழாம், தேனையுடைய மலரைச் சாரும் அளிகள்போல் முரான்று மொய்த்தார்கள். அந்தணனொருவன் வந்து பாண்டவர்களுக்கும் அச்செய்தியைக்கூற அவர்களும் மற்றைய "பார்ப்பனமாக்களோடுந் தாங்கருங் கொடிய கானந் தம்மனத் தேரிற் போனார்.'' மனோவேகமாகச் செல்வது காற்றினுங் கடுகிச் செல்வது; நினைத்தவளவில் தான் எண்ணிய இடத்திற் சென்று சேருதல். மனோரதம் என்பது மனத்தின்மீது இவர்ந்து தான் எண்ணிய எண்ணிய இடங்களுக்கு அதனை யுகைத்துச் செல்லுதல். இவ்விடத்தில் தேரிற் போவதுபோல் விரைந்து சென்றார்கள் என்று கொள்ளவேண்டும் போலும்.

இவர்கள் நெறிநோக்கிச் செல்லுங்கால் பொழுது புலர்ந்தது.

**குன்றமுங் கொடிய கானுங் கூரிருட் கங்கு னீங்கி**
**நன்றுநன் றுதவ வந்தீர் நடந்துநீ ரிளைத்தீர் போலு**
**மென்றுகொண் டுவகை யோடு மின்மலர்க் கழுநீர் வாச**
**மன்றலந் தென்றல் வீசி வழிவிடாய் தணித்த தன்றே**

[இருளில் காடும் மலையும் கடந்து, எனது நண்பனான யாகசேனன் மகளை மணந்து உதவிபுரிய வந்தவராகிய நீங்கள், வழிநடந்திளைத்தீர்போலும் என்று மகிழ்ச்சியோடு இனிய கழுநீர் மலர்களின் வாசனையை வீசித் தென்றல் அவர்களை இளைப்பாற்றியது]

தென்றல் இனிமையாய் வீசியது. கோகிலங்களும் யாவரையும் வதுவைகாண வம்மினென்றழைப்பபோற் கூவின. மயில்கள், மற்றையவரசர்க்குக் குறையெய்துவது திண்ணமெனத் தோகைகளை விரித்தாடின. வழியில் அப்போதலர்ந்த செந்தாமரை மலரொன்றைச் சுற்றி வண்டுகள் உட்புகாமல் மொய்த்து நிற்கவும், அவைகளைத் தன்சிறகால் வீசி ஓர்வண்டுஉட்புக்குமதுவுண்ணவும்; தடாகமொன்றில் மாங்கனி வீழ அதைத் த[illegible]க்கு இரையாக்க வெண்ணி மீன்களெல்லாம் அதினிடம் ஓட, அவைகளை மீறிச் சரேலென ஒரு வாளைபுக்குக் கனியைக் கௌவிச்செல்லவும் கண்டு, அவைகளை நன்னிமித்தமாய்க் கொண்டு உவகைபொங்கிய மனத்தராய்ப் பாண்டவர்களும் மேனடந்து சென்று, துருபதன் நகரவாயிலை அடைந்தார்கள். அந்நகரும்;

தொடங்கியுந் தொடக்கந் தொட்டுத்
துகளற வளர்ந்து மீள
மடங்கியுஞ் செல்லு கின்ற
மன்னுயி ருலக மெல்லா
முடங்கிய சார்ங்கச் செங்கை
முகுந்தன்வாய்ப் புகுந்த காலத்
தடங்கிய வுதரம் போன்ற
தந்தமா நகரி யம்மா

[படைக்கப்பட்டும், அது முதல் குற்றமற வளர்ந்து காப்பாற்றப்பெற்றும், மீளவும் அழிக்கப்பெற்றும் உழல்கின்ற உயிர்களைக்கொண்ட அந்நகரம், சார்ங்கமென்னும் வளைந்த சங்கைத் தன் செங்கையிலுடைய திருமாலின் வாயில் உலகமெல்லாம் புகுந்தடங்கிய காலத்தில் அவ்வயிறு இருந்தது போன்றது]

சிருட்டி, திதி, சங்கார மென்னும் மூவகை முறைகளுக்குட்பட்ட உயிர்கள் யாவற்றையும் உலகங்களோடு ஊழிக்காலத் தடக்கிய திருமாலின் வயிறு போன்று, யாவரையும் எல்லாப்பொருள்களையும் அடக்கியிருத்தலால், அத்திரு நகர் இருந்தது.

குழைப்புறங் கடந்த செங்கட்
குறுநகைக் கொவ்வைச் செவ்வாய்
யிழைப்பொலி முலையி னளுக்
கிற்றைநாள் வதுவை யென்று
மழைப்புற மாட மேறி
வருநரை மலர்க்கை காட்டி

யழைப்பன போன்ற வீதி
பணிகொடி யாடை யெல்லாம்

[குண்டலங்களையுடைய காதளவோடிய செவ்வரிபடர்ந்த ண்களையும், புன்முறுவலையும், கொவ்வைப்பழம் போன்ற சிவந்த உதடுகளையும், மார்பிற் பொலிந்த அணிகளையு டைய திரௌபதிக்கு, இன்று திருமணமென்று சொல்லி, மேகங்களைத் தன்புறத்தே யுடைய மாடங்களின் தேறிக் கொடியாடைகளெல்லாம், வருபவரைத் தங்கள் லர்ந்தகைகளால் அழைப்பபோல் ஆடின.]

ம்பர் தன் மிதிலைக்காட்சிப்படலத்தின் முதற்செய் ளாக,

மையறு மலரி னீங்கி
யான்செய்மா தவத்தின் வந்து
செய்யவ ளிருந்தா ளென்னச்
செழுமணிக் கொடிக ளென்னும்
கைகளை நீட்டி யந்தக்
கடிநகர் கமலச் செங்கண்
அய்யனை யொல்லை வாவென்
றழைப்பது போன்ற தம்மா

[குற்றமற்ற செந்தாமரை மலரைவிட்டு நீங்கி, மிதிலை ாகிய யான் செய்த மா தவத்தால் இலக்குமி இங்கேவந்து ங்கியிருக்கிறாள் என்று சொல்லி, அழகிய கொடிகளென் னும் தன் கைகளை நீட்டி அந்தக் காவலுடைய நகரானது, மலச் செங்கண்ணையுடைய இராமனை விரைவில் வாவெ ன்று அழைப்பது போன்றது.]

என்னும் பாடலை அமைத்து, நகரமானது தன் கைக ளாகிய கொடிகளால் இராமனை அழைத்தது [illegible] ன் றிருந்ததென்றார். நகருக்குக் கொடிகள் கைக [illegible] அமைந்து காற்றில்அலைந்தாடுவது அழைப்பதுபோன றிருந்தது. வில்லிபுத்தூரார் செய்யுளில் கொடிகளே தங்கள் கைகளைக்காட்டி அழைத்தனவாகக் கொள்ள வேண்டும். கம்பருடைய செய்யுளை இவர் கையாண்டி ருப்பது வெளிப்படை. ஆயினும், கொடிகள் 'மழைப் புற மாடமேறி' என்பது வில்லியினுடையதே. அது மிகவும் நன்றாயுமிருக்கிறது. கம்பருடைய தற்குறிப் பேற்ற வணிகளையே பெரும்பாலும் தழுவி இவரும் மற்றையோரும் எழுதியிருப்பதே கம்பருக்குப் பெரும் புகழைத் தருகிறது. கைகேசி சூழ்வினைப் படலத்தில் உள்ள,

எண்ட ருங்கடை சென்ற யாம
மியம்பு கின்றன வேழையால்
வண்டு தங்கிய தொங்கல் மார்பன்
மயங்கி விம்மிய வாறெலாம்
கண்டு நெஞ்சு கலங்கி யஞ்சிறை
யான காமர் துணைக்கரம்
கொண்டு தம்வயி றெற்றி யெற்றி
விளிப்ப போன்றன கோழியே

என்கிற செய்யுளைப் புகழேந்தியும் புகழ்ந்து கொண் டாடித் தன் நளவெண்பாவில்

. தைய றுயர்க்குத் தரியாது தஞ்சிறகாங்
[illegible]கையான் வயிறலைத்துக் காரிருள்வாய்—வெய்யோனை
வாவுபரித் தேரேறி வாவென் றழைப்பனபோற்
கூவினவே கோழிக் குலம்.

என்று எழுதியிருப்பதும் நோக்கத்தக்கது.

பாண்டவர்களும் அவ்வூரில் ஓர் குயவன் வீட்டிற் போய்த் தங்கினார்கள். வருணபேதமில்லாத காலமக் காலமென்பதை இச்சிறு நிகழ்ச்சியும் எடுத்துக் காட்டு கிறது. தாயை அவ்விடத்தில்விட்டு ஆண்மக்களெல் லோரும் வேத்தவை சென்று சேர்ந்தார்கள். ஆங்கண் காண்பவர் ஆண்மை தேயத் திரௌபதியும் திருவோ லக்கத்தில் வந்தடைந்தாள். தோழியர், புடைசூழ்ந்து அவள் பொருட்டு ஆங்குத் திரண்ட மன்னர் யாவ ரென்று ஒவ்வொருவரையும் சுட்டிக் காட்டிக்கொண் டும், அவரவர் புகழையும் குணகுணங்களையும் எடுத் துச் சொல்லிக்கொண்டும் நின்றார்கள். முதலில் துரியோதனனைக் காட்டிப் பின் அவன் தம்பியையும் காட்டினார்கள்.

மணியின் கிரண வெயிலெறிப்ப
மண்ணேழ் தாங்கு நச்செயிற்றுப்
பணியின் முடிநா யகத்தலையின்
பாங்கே நிரைத்த பஃறலைபோற்
றுணியுங் கொடுமை வகிரன்ன
துணைவர் துச்சா தனன்முதலோ
ரணியுங் கழற்காற் சுயோதனனுக்
கருகா சனத்த ரிவரென்றார்.

[தன் தலையினுச்சியில் விளங்கும் மாணிக்கங்களில் கிர ணங்கள் எங்கும் ஒளியைப் பரப்ப, பூலோகம், புவர்லோ கம் முதலாகச் சொல்லப்பட்ட ஏழுலகத்தையும் தாங்கு கின்ற படத்தையும் விஷப்பற்களையும் கொண்டு ஆயிரந் தலைகளையுடைய ஆதிசேஷனது முக்கியமான நடுத்தலைக் குப் பக்கத்தே வரிசையாய் நிரைந்திருக்கும் பல தலைகள் போலவும், நடுத்தலையாகிய கொடுமையென்பதே பல பிளவு பட்டு நிற்பதுபோலவும் துச்சாதனன் முதலோர், வீரக்கழ லணிந்த கால்களையுடைய துரியோதனனுக்குப் பாங்கர் ஆதனங்களில் அமர்ந்திருப்பவர் இவர், அவன் தம்பியரென்று காட்டினார்கள்]

இச்செய்யுளின் பொருத்தத்தை யுற்றுநோக்க நமக்கு அடங்கா மகிழ்ச்சி யுண்டாகிறது. வைணவராகிய வில்லிபுத்தூராருக்கு நிலத்தைத் தாங்கும் ஆதிசேட னுடைய ஞாபகம்வருவது இயற்கையே. அவனுடைய தலைகளைத் துரியோதனன் முதலானோர்க்கு ஒப்பிடு தல் ஓர் விந்தையாகவே இருக்கிறது. உரகனுச்சி மணியைப்போன்ற பலமணிகளைத் துரியோதனன் தன்றலைமேற் கொண்டிருக்கிறான்; மண்ணேழ் தாங்கு வதுபோல் அக்காலத்திய உலகத்தைத தாங்கி அர சாட்சி செய்துவந்தான்; பிறருக்குத் தீங்காகிய நஞ் சைத் தன்னிடத்துக் கொண்டுள்ளான்; நடுநாயகமாகிய தலையின் இருபுறமும் பல தலைகள் நிரல்பட நிற்பவை போன்று, பல தம்பியர் அவனிருமருங்கும் நின்றார் கள்; அவர்களும் முதற்றலைபோல் கொடுமையும் விட மும் தம்மிடத்தே கொண்டுள்ளவர்க ளானபடியால், கொடுமை யென்பதொன்று பல பிளவுபட்டுப் பலவு ருவம் எடுத்து நிற்பதே போன்றிருந்தார்கள். இவர் கள் யாவரும் திரௌபதிக்கு எவ்வாற்றானும் பொருந் தியவர்க ளல்லராதலால், இவர்களிலெவர்க்கேனும் மாலையிட்டுக் கணவனைய் வரித்தல் தகாதெனக் காட்ட வேண்டிக் குறிப்பா லவ ரியற்கையை யெடுத்துத் தோழியர் காட்டினார்கள். இதேபோல் இதற்கடுத்த செய்யுளினும்,

உலைவந் தயருஞ் சூன்மந்திக்
குருகா நிலங்கீண் டுதவுகுலக்
கலைவன் பலவின் சுளைகீறிக்
களிப்போ டளிக்குங் காந்தாரத்
தலைவன் சகுனி யிவன்கண்டாய்
தக்கோ ராடாச் சூதுக்கு

K-C.R. 700



நிலைவஞ் சனைக்குந் தரணியரில்
யாரே இவற்கு நிகரென்றார்.

[வருந்திஅயரும் சூல்கொண்ட பெண் குரங்குக்காக அநு தாபப்பட்டு நல்ல ஆண் குரங்கானது நிலத்தைக்கீறி முட் களால் வலிவடைந்த பலாவைப்பிளந்து அதன் சுளைகளை அன்போடு அதற்களிக்கும் காந்தார நாட்டின் தலைவனான சகுனி யிவன்காண்; தகுந்தவராடாத சூதுக்கும் அவன் மனத்தே ஊன்றி நிலைபெற்ற வஞ்சனைக்கும் இந்நிலவுலகத் தில் இவனுக்கு ஒப்பாவார் யாவரிருக்கிறார்கள்]

முதலிரண்டடிகளில் இவனும் தன் மனைவியரிடத் துக் காதல் காட்டி அவர்களுக் கினியவை செய்வான் என்னும் பொருள் தோன்றநிற்பினும், பின்னிரண்டடி களால் அவன் மானுடர் எண்ணிக்கையி லுறத்தக் கவ னல்லனென்பதைத் தோழியர் அவளுக்கு வெளி யிட்டார்கள். இவ்வாறு அங்கே கூடிய மன்னரைத் தனித்தனிக் காட்டிப் பலராமரையும் கண்ணனையும் காட்டினார்கள்.

இந்தக் குரிசில் யதுகுலத்துக்
கெல்லாந் திலக மெனுமாறு
வந்துற் பவித்துப் பொதுவருடன்
வளருங் கள்ள மாமாயன்
முந்தக் கஞ்ச மாமனுயிர்
முடித்தா னிவற்கு முகிலூர்தி
அந்தப் புரத்தி லாராவ
மந்தப் புரத்துக் காராமம்.

[பொதுவர் - இடையர். புரம் - பட்டணம். முகிலூர்தி- இந்திரன். அவனூரில் இருக்கும் கற்பகச்சோலை, கண்ண னுடைய அந்தப் புரத்துச் சோலையா யமர்ந்துள்ளது]

வந்துற்பவித்த மாயன் என்றதால், அவன் மானு டப் பிறவியான திரௌபதிக் குரியவனல்லன் என்ப தும்; மாமனுயிர் முடித்தான் என்பதனால் ஏதோ ஒரு உள்ளக்கருத்தை முடிவிக்கவே இங்கு வந்தவதரித் திருக்கிறான் என்பதும், அவ்வுள்ளக் கருத்தும் இவ ளால் முடிவுபெறும் என்பதும்; கற்பகச் சோலைகள் சூழ நிற்பவன் கற்பகத்தருவே யனையான், இடுக்கண் மாட்டு அவனை இரந்து நின்றார்க்கு இந்திரபோகமும் எளிதில் தரவல்லவன் என்பதும்; அவ்வாறே உன்னைக் கொண்டு பகைபோக்கிப் பூபாரம் நீக்கி, அழுங்கலுற்ற விடத்து உன்னைக்காத்து உனக்கும் உன்னைச் சேர்ந் தார்க்கும் வீடுபேற்றினை அளிக்கவல்லவ னிவனென் பதும் குறித்து நிற்கிறது போலும் இச்செய்யுள். இவ் வாறே 'இன்னமுதச் சொல்லாய் நல்லாய் மென்பூ வாய் தோகாய் திரௌபதியே, காண்' என்று பல வர சர்களையும் தோழியர் காட்டினார்கள். சந்தவழகை யுடைய செய்யுட்களெழுதுவதில் கைதேர்ந்த வில்லி புத்தூராரையும் இச்சமயத்தில் மீறிநின்ற நெல்லூர் வீரகவிராஜருடைய செய்யுள்களில் ஒன்றை இங்கே எடுத்துக்கூறுவோம். சந்திரமதியைத் திருவோலக் கத்து மண்டபத்திற் கொணர்ந்து தோழியர் அவளுக் கும்

மன்னர் நாமமும் நாடும் வழிகளும்
இன்ன தின்னதென வெடுத்தோதுவார்,

சொன்னதாவது,

அதிபார தனபார வதிரூப
மலர்மானை யனையா யிவன்
நதிபாய வுயர்போதி னறைபாய
நிறையாத சிறைவாவியில்
மதியாமல் வலைபீறி வெடிபோன
பருவாளை வளைபூகமேல்
குதிபாய மடல்கீறி விழுதேறல்
கரைசாடு குடநாடனே.

இச்சந்தம் மிகவும் ஒய்யாரமாய்ச் செல்வது அச் சமயம் அவ்வணங்குக்குப் பொருத்தமாயும் அச்சம யத்திற்கு ஏற்பவும் நிற்பது குறிக்கத் தக்கதாதலால் அதை [illegible]ங்கெடுத்துக் கூறியதற்கு நண்பர் நம்மை மன்னிப்பாராக. தமிழில் நமது நேயர்களுக்கு ஊக்க மும் சுவையூற்றும் பலவித எண்ணவெழுச்சியும் வேண்டுமென்பதே நமது உள்ளக்கருத் தானபடியால் சிற்சில சமயத்தில் நாம் மிகைபடக் கூறுவதையும் அவர்கள் பொறுப்பாராக.

# அப்பர்

## 3. அப்பர் சிவஸ்தல யாத்திரைகளைப்பற்றிய புராண வரலாறு

### 5. வடஆற்காடு ஜில்லாத் திருப்பதிகளுக்கு யாத்திரை.

பலநாள் திருப்பைஞ்ஞீலியில் திருநாவுக்கரசர் திருத் தொண்டு புரிந்து பின்னர்த் தேயுலிங்க ரூபமாய் விளங்கும் திருவண்ணாமலையை நோக் கிச் சென்றனர். இத்தலத்தில் அப்பர் பாடிய பதிகங்களில் திருநேரிசை ஒன் றும், திருக்குறுந்தொகை இரண்டும் உள. மற்றப்பதிகங்கள் வான்மீகத்திற்கு இரை யாயின வென்பதற்கு ஐயமில்லை. அவற்றுள் அப்பர் * திருவண்ணாமலை யடிவாரத்தருகிற் சென்றவுடன் பாடிய பாடல், திருவண்ணாமலையைச் சிறப்பித்து அத்திருப்பதியைக் காணக்கூடிய மானுடப்பிறவி முத்திக்கும் மேலானதென்னும் பதிகம். அது சேக் கிழார்காலத்தில் வழங்கி யிருக்கலாம். அது நமக்குக் கிடைக்கவில்லை.

244 பக்கத் தொடர்ச்சி.

திருவண்ணாமலையில் அப்பர் பாடிய பாசுரங்களால் தமிழ்நடு நாட்டின் பூகோள இலக்கணங்கள் ஒரு வாறு காண்கிறோம். இம்மலையில் † பொன்மண் உண்

* செங்கண் விடையார் திருவண்ணா
மலையைத் தொழுது வலங்கொண்டு
துங்க வரையின் மிசையேறித்
தொண்டர் தொழும்புக் கெதிர்நிற்கும்
அங்க ணரசைத் தொழுதெழுந்து
இனைத்துத் திருநா வுக்கரசர்
தங்கு பிறப்பை வீட்டினுக்கு
மேலாம் பெருமை சாத்தினார்
பெரியபுராணம். 312

† (i) பைம்பொனே பவளக் குன்றே
பரமனே பால்வெண் ணீறு
செம்பொனே மலர்செய் பாதா
சீர்தரு மணியே மிக்க
அம்பொனே கொழித்து வீழும்
அணியண்ணா மலையு ளானே

K.C.R. 700
3-4-29

டென்றும் ‡ சிங்கங்கள் நிறைந்திருந்தன வென்றும் $ மாணிக்கக் கற்களும் உண்டென்றும் அநுமானிக்கலாம். இம்மலையின் இயற்கை, தேகத்திலும் * பிறவியிலுமுள்ள வினைகளை ஒட்டுமென்றும், இத்திருப்பதியை யாம் மறக்கலாகாதென்றும் † அப்பர் வற்புறுத்திக் கூறுகின்றனர். திருஞானசம்பந்தரும் அவ்வாறேதமது பாசுரங்களிற் கூறியுள்ளார் ‡.

திருவண்ணுமலையை விட்ட பின்னர், அப்பர் காஞ்சிபுரத்திற்குச் சுமார் 10 மைலில் செய்யாற்றின் வடகரையிலுள்ளதும், திருஞானசம்பந்தர் ஆண்பனைகளைப் பெண்பனைக ளாக்கியதுமாய திருஒத்தூர் என்னும் திருப்பதிக்குச் சென்ருர் என்றும், அப்பதியில் திருத்தாண்டக முதலிய விருத்தங்கள் பாடினுரென்றும் பெரியபுராணத்திற் காண்கின்றோம். ஆயினும் திருநாவுக்கரசுநாயனுர் இங்குத் திருவாய்மலர்ந்தருளிய பாசுரங்கள் யாவும் மறைந்தன.

## 6. செங்கல்பட்டு ஜில்லாச் சிவஸ்தல யாத்திரை.

திருஒத்தூரைத் தொழுது அவ்விடத்தினின்று நீங்கி நஞ்சிருள் மிடற்றர் வதியும் பலபதிகள் வணங்கிப்பாடி அப்பர், தெய்வப்பதியாகிய உமையாள் தழுவக் குழைந்த காஞ்சிமாநகரை யடைந்தனர். காஞ்சிவாணர் இவர் வருகையைக் கேட்டு நகரை அலங்கரித்து மிகவும் அன்புடன் வரவேற்றனர். எதிர்கொண்டிறைஞ்சும் அடியார்களைத் தாமும் வணங்கி ஏகம்பர் செம்பொற் கோயிற் றிருமுன்றிலைக் குறுகி, திருநாவுக்கரசு என்புகரையும் அன்புடன் கண்ணீர் பெருகக் "கரவாடும் வன்னெஞ்சர்" என்னும் திருப்பதிகம் பாடினுர்.

திருவேகம்பம் *தரிசித்த பின்னர்ப்பல தமிழ்மாலைகள் திருவேகம்பர்மேற் பாடிக் † கச்சிமயானத்தை யடைந்து அதை வலம்வந்து ‡ கச்சி திருமேற்றளி முதலிய ஆலயங்களிற் பதிகங்கள் பாடிக் காஞ்சிநகரில் சிலநாள் திருத்தொண்டு செய்துவந்தனர். அக்காலத்தில் ஒரு சமயம் திருமாற்பேறு $ என்னும் திருப்பதிக்கு அப்பர் சென்று திருப்பதிகங்கள் பாடிப் பின்னர்க் காஞ்சிபுரத்திற்கு மீண்டனர்.

திருக்கச்சியேகம்பத்தில் அப்பர் பாடிய திருப்பதிகங்களில் ஏழு, தேவாரத்தில் உள. அவற்றுள் முன்கூறிய காந்தாரப் பண்ணமைந்த "கரவாடும் வன்னெஞ்சர்" என்னும் முதல்பெற்ற பதிகம் ஒன்று, திருநேரிசை—1, ¶ திருவிருத்தம்—1, திருக்குறுந்தொகை—2, திருத்தாண்டகங்கள்—2, ஆக ஏழுபதிகங்களில் 72 பாசுரங்கள் உள. திருத்தாண்டகங்களிரண்டும் "ஏகம்பன் காணவனென் னெண்ணத்தான்" எனச் சிவபெருமானைப்போற்றும் முடிவுகளைப் பெற்றவை. இதன் விருத்தியுரையோ வென்ன அவர் கச்சியிற் பாடிய மற்றைய திருப்பதிகங்கள் விளங்கா நின்றன *. கருவுற்ற நாள்முதல் அப்பர் சிவபாதச் சிந்தையராய் உருகியதும், அக்குஞ்சிதபாதமே அவருக்கு‡மருந்தும் பொருளும் மக்களும் சுற்றமுமாய்ப் பஞ்சேந்திரியக் கட்டவிழ்த்தமை, தன்னையும் அறியாதுநாயனுர் வெளிவிட்டனரோவென்ன இப்பாசுரங்

என்பொனே யுன்னை யல்லா
லேதுநா னினைவி லேனே!
திருவண்ணுமலை-திருநேரிசை. 4

(ii) "அருவி பொன் சொரியுமண்ணுமலை"—ஷை—3.

‡புரிசடை முடியின் மேலோர் பொருபுனற்கங்கைவைத்துக்
கரியுரி போர்வை யாகக் கருதிய கால காலா!
அரிகுல மலிந்த வண்ணு மலையுளாய்! அலரின் மிக்க
வரிமிகு வண்டு பண்செய் பாதநான் மறப்பி லேனே!
—ஷை—6.

$ மரவஞ்சிலை தரளம்மிகு
மணியுந்து வெள்ளருவி
அரவஞ்செய முரவம்படு
மண்ணுமலை யண்ணல்
உரவஞ்சடை யுலவும்புன
லுடனுவது மோரார்
குரவங்கமழ் நறுமென்குழ
லுமைபுல்குதல் குணமே
சம்பந்தர்-பண்-நட்டபாடை. 5

* i உருவமு முயிருமாகி யோதிய வுலகுக் கெல்லாம்
பெருவினை பிறப்பு வீடாய் நின்றவெம் பெருமான் மிக்க
அருவிபொன் சொரியு மண்ணு மலையுளா யண்டர் கோவே!
மருவிநின் பாத மல்லான் மற்றொரு மாடி லேனே
திருவண்ணுமலை-திருநேரிசை, 3

ii. தேடிச் சென்று திருவடி யேத்துமின்
நாடி வந்தவர் நம்மையு மாட்கொள்வர்
ஆடிப் பாடி யண்ணுமலை கைதொழ
ஓடிப் போகம துள்ளவி னைகளே
—திருவண்ணுமலை-திருக்குறுந்தொகை. 5

† வீரனை விட முண்டானை விண்ணவர்
தீரனைத் திரு வண்ணு மலையனை
உருவி னையுண ரார்புர மூன்றெய்த
அருவி னையடி யேன்மறந் துய்வனே?
ஷை முதல்-திருக்குறுந்தொகை. 7

‡ (i) ஞானத் திரளாய் நின்ற
பெருமான் நல்ல வடியார்மேல்
ஊனத் திரளை நீக்கு மதுவு
முண்மைப் பொருள்போலும்
ஏனத் திரளோ டினமான் கரடி
யிழியு மிரவின்கண்
ஆனைத் திரள்வந் தணையுஞ் சாரல்
அண்ணு மலையாரே! —(3)

(ii) வந்தித் திருக்கு மடியார் தங்கள் வருமேல் வினையோடு
பந்தித் திருந்த பாவந் தீர்க்கும் பரம னுறைகோயில்
முந்தி யெழுந்த முழவினோசை முதுகல் வரைகண்மேல்
அந்திப் பிறைவந் தணையுஞ் சாரல் அண்ணு மலையாரே-(7)
சம்பந்தர்-பண்.தக்கேசி.

* இதைப் பெரியகாஞ்சிபுர மென்பார்.

† ஆங்காங்குச் சிவஸ்தலங்களில் மயானமே விசேடமானது. பிற்கால நாகரிகத்தால் மயான பூசையும் அவ்விடத்திய சிவசேவையும் மறையலாயின. ஆகையால் கச்சிமயானத்தில் தற்காலத்தில் விசேஷமில்லை.

‡ கச்சி திருமேற்றளி என்பது திருக்கச்சி மேற்றளி என்றும் வழங்கும்.

$ பள்ளூர் ஸ்டேஷனிலிருந்து தென்மேற்கே 2 மைலில் காணப்படும்,

¶ இவ்விரண்டு பதிகங்களைப்பற்றிப் பின்வரும் அத்தியாயங்களிற் காண்க.

† பெரியபுராணம் 328. திருநாவுக்கரசு நாயனுர்.

* கருவுற்ற நாண்முத லாகவுன் பாதமே காண்பதற்கு
உருகிற்றென் னுள்ளமு நானுங் கிடந்தலந் தெய்த்தொ
[ழிந்தேன்]
திருவொற்றி யூரா! திருவால வாயா! திருவாரூரா!
ஒருபற்றி லாமையுங் கண்டிரங்காய் கச்சியேகம்பனே!
திருக்கச்சியேகம்பம்-திருவிருத்தம்—6

† மருந்தி னோடுநற் சுற்றமும் மக்களும்
பொருந்தி நின்றெனக் காயவெம் புண்ணியன்



கள் காணப்படும். அவைதாம் அவர் சிந்தை, சிவமாய் நின்ற செம்மையை $ விளக்குவதுடன் அவர் சுவாநுபவ நீர்மையை ஞானரசத்துடன் காட்டாநிற்கும். "* பொய்யனைத்தையும் விட்டவர் புந்தியுள் மெய்யன்," பண்ணிலோசையும் † பழத்தினிலின் சுவையும்போல் திகழினும் பேபோடாடல் கடனெனப் பெற்றுன் என்பதை அப்பர் தேவாரம் நன்கு விளக்கும்.

திருக்கச்சி மேற்றளியில் ‡ அப்பர் பாடிய திருநேரிசைப்பதிகம் மதாதீதமாய் வைணவ சைவ பேதமின்மையைக் காட்டும். சிவசொரூபமே ஒரு பாகத்தில் விஷ்ணு ரூபமென விளக்கலானுர்.

திருநாவுக்கரசுநாயனுர் திருமாற்பேறில் பாடிய திருவிருத்தங்கள் இரண்டு பாசுரங்களும் * இரண்டு திருக்குறுந்தொகைப் பதிகங்களும் ஒரு திருத்தாண்டகமும் திருமுறைகளிற் காண்கின்றோம். திருவிருத்தங்களில் பாசுரங்கள் எட்டும், ஒரு திருக்குறுந்தொகையில் இரண்டும் † மறைந்தன. இப்பதியின் நாமம் ‡ எவ்வாறு வந்ததென்பதும் $ இம்மைக்கும் ¶ மறுமைக்கும் துணை திருமாற்பேற் றெஞ்செம்பவளக் குன்றென்றும் அப்பர் போற்றித் தத்துவவிளக்கத்தில் ஓங்காரத்தில் பரம்பொருள் தனித்து விளங்குவதையும் குறிப்பிட்டனர்.

திருமாற்பேறினின்று கச்சியேகம்பத்திற்கு மீண்ட அப்பர் பல திருத்தொண்டுகள் "ஏகம்பன் காணவனென் எண்ணத்தான்" எனப்பாடிச் செய்து சிலநாள் கழிந்தபின்னர்ப் பலாக்கனி விசேடமான $ திருக்குன்றமடைந்தார். அவ்விடத்திலும் மற்றும் அதனருகிலுள்ள பதிகளிலும் பல தமிழ்மாலைகளைப்பாடித் †திருவான்மியூரை யடைந்தாரெனப் பெரியபுராணம் கூறும்.

திருக்கழுக்குன்றத்தில் அப்பர் பாடிய திருத்தாண்டகப் பதிகம்ஒன்றில் இரண்டு பாசுரங்களே திருமுறைகளில் உள. மற்றவை மறைந்தன. திருக்கழுக்குன்றத்தருகில் எச் சிவஸ்தலங்களிருந்தனவோ என்பதும் நமக்கு விளங்கவில்லை. அதுபோலவே திருவான்மியூருக்கும் திருமயிலைக்கும் இடையிலிருந்த திருப்பதிகள் யாவோவென்பதும் இனிவரும் ஆராய்ச்சி மாணவர்களுக்கு விடப்பட்டவையே யாம்.

திருவான்மியூரில் அப்பர் பாடிய திருக்குறுந்தொகை யொன்றே நாம் பெற்றிருக்கின்றோம். போலிப் பக்திபா[illegible] பரம்பொருள் விளங்காதென்றும், ‡ உள்ளமுள் கலந்தேத்த வல்லார்க்கே" அது விளங்குமென்னும் "பெருவாய்மை" $ கொண்டதாம் இத்திருக்

கருந்த டங்கண்ணி னுளுமை கைதொழ
இருந்த வன்கச்சி யேகம்பத் தெந்தையே
திருவேகம்பம். திருக்குறுந்தொகை—5

‡ (i) மூக்கு வாய்செவி கண்ணுட லாகிவந்
தாக்கு மைவர்த மாப்பை யவிழ்த்தருள்
நோக்கு வானமை நோய்வினை வாராமே
காக்கு நாயகன் கச்சியே கம்பனே
திருவேகம்பம் (1வது) திருக்குறுந்தொகை 7.

(ii) பொறிப்பு லன்களைப் போக்கறுத் துள்ளத்தை
நெறிப்ப டுத்து நினைந்தவர் சிந்தையுள்
அறிப்பு றும்மமு தாயவ னேகம்பம்
குறிப்பி னுற்சென்று கூடித் தொழுதுமே
திருவேகம்பம் (2வது) திருக்குறுந்தொகை—4.

சிந்தையுட்சிவ மாய்நின்ற செம்மையோ
டந்தி யாயன லாய்ப்புனல் வானமாய்ப்
புந்தி யாய்புகுந் துள்ள நிறைந்தவெம்
எந்தை யேகம்ப மேத்தித் தொழுமினே—ஷை—5

* திருவேகம்பம்—திருக்குறுந்தொகை, 9.

† பண்ணி லோசை பழத்தினி லின்சுவை
பெண்ணொ டாணென்று பேசற் கரியவன்
வண்ண மில்லி வடிவுவே றுயவன்
கண்ணி லுண்மணி கச்சியே கம்பனே
திருவேகம்பம்—திருக்குறுந்தொகை. 8

‡ ஊனி லாவி யியங்கி யுலகெலாம்
தானு லாவிய தன்மைய ராகிலும்
வானு லாவிய பாணி பிறங்கவே
கானி லாடுவர் கச்சியே கம்பனே —ஷை—3

இத்திருத்தாண்டக விருத்தத்தையும் நோக்குக:—
அசைந்தவன்கா ணடமாடிப் பாடல் பேணி
யழல்வண்ணத் தில்லடியு முடியுந் தேடப்
பசைந்தவன்காண் பேய்க்கணங்கள் பரவி யேத்தும்
பான்மையன்காண் பரவினினைந் தெழுவார் தம்
[பால்
கசிந்தவன்காண் கரியினுரி போர்த்தான் றன்காண்
கடலில்விட முண்டமரர்க் கமுத மீய
இசைந்தவன்கா ணெழிலாரும் பொழிலார் கச்சி
யேகம்பன் காணவனென் னெண்ணத்தானே.
—ஷை—திருத்தாண்டகம் 7.

$ (i) மாயனும் மாலனுகி மலரவ னுகிமண்ணுய்த்
தேயமாய்த் திசையெட்டாகித் தீர்த்தமாய்த் திரிதர்கின்ற
காயமாய்க் காயத்துள்ளார் காஞ்சிமா நகர்தன்னுள்ளால்
ஏயமென் றேளிபாக ரிலங்குமேற் றளியனுரே.—
திருக்கச்சிமேற்றளி—திருநேரிசை 6

ii மண்ணினையுண்டமாயன் றன்னையோர்பாகம்கொண்டார்
பண்ணினைப் பாடியாடும் பத்தர்கள் சித்தம்கொண்டார்
கண்ணினை மூன்றும்கொண்டார் காஞ்சிமா நகர்தன்னுள்
[ளார்
எண்ணினை யொன்றைவைத்தா ரிலங்குமேற் றளியனுரே.
—ஷை—7.

* மாணிக் குயிர்பெறக் கூற்றை யுதைத்தன மாவலிபால்
காணிக் கிரந்தவன் காண்டற் கரியன கண்டதொண்டர்
பேணிக் கிடந்து பரவப்படுவன பேர்த்துமஃதே
மாணுக்க மாவன மாற்பே றுடையான் மலரடியே (1)
கருடத் தனிப்பாகன் காண்டற்கரியன காதல்செய்யில்
சூருடர்க்கு முன்னே குடிகொண் டிருப்பன கோலமல்கு
செருடக் கடிமலர்ச் செல்விதன் செங்கமலக் கரத்தால்
வருடச் சிவப்பன மாற்பே றுடையான் மலரடியே (2)

† 8-9-ம் பாசுரங்கள்.

‡ பொருமாற் றின்படை வேண்டிநற் பூம்புனல்
வருமாற் றின்மலர் கொண்டு வழிபடும்
கருமாற் கின்னருள் செய்தவன் காண்டகு
திருமாற் பேறு தொழவினை தேயுமே
திருமாற்பேறு—திருக்குறுந்தொகை. 1

$ ஈட்டு மாநிதி சால விழக்கினும்
வீட்டுங் காலன் விரைய வழைக்கினும்
காட்டின் மாநட மாடுவாய் காவெனில்
வாட்டம் தீர்க்கவும் வல்லர்மாற் பேறரே
திருமாற்பேறு. 2ம் திருக்குறுந்தொகை. 6

¶. திருமாற்பேறு திருத்தாண்டக விருத்தங்களை நோக்குக.

$ செங்கல்பட்டு ஸ்டேஷனிலிருந்து சுமார் 8 மைலில் இருக்கிறது.

† சென்னையிலிருந்து தெற்கே 5 மைலில்உள்ள ஸ்தலம்.

‡ திருவான்மியூர் திருக்குறுந்தொகை 4.

$ திருவான்மியூர் மருந்தைச் சேர்ந்துபணிந் தன்பினொடும்
பெருவாய்மைத் தமிழ்பாடி யம்மருங்கு பிறப்பறுத்துத்

குறுந்தொகை. மயிலாப்பூரில் அப்பர் பாடிய பதிகம் ஒன்றும் திருமுறைகளிற் காணேம். பின்னர்த் திருமயிலையினின்று சமுத்திரக்கரை மார்க்கமாய்த் ¶ திருவொற்றியூரை அப்பர் அடைந்தார்.

தருவார்தங் கோயில்பல சார்ந்திறைஞ்சித் தமிழ்வேந்தர்
மருவாரு மலர்ச்சோலை மயிலாப்பூர் வந்தடைந்தார்.
—பெரியபுராணம் 331.

¶திருவொற்றியூர் சென்னைக்கு வடக்கே 4மைலில் உள்ளது. இப்பேர்கொண்ட ரயில்வே ஸ்டேஷனுக்கு வடகிழக்கே கால்மைலில் திருக்கோயில் காணப்படும். கோபுரவாயல்வரையிலும் மணல் காணப்படுகிறதால் அக்காலத்தில் இக்கோயில் சமுத்திரக்கரையிலே யிருந்ததென்று அநுமானிக்கலாகும்

# தமிழ்ப் பாடம் 66.

## [ நளவெண்பா. ]

### கலி நீங்கு காண்டம்.

இருதுபன்னன் குண்டினபுரம் போய்ச்சேர, வீமராசன் "நிபம் ஒன்று மின்றி இப்பொழுதிவன் எதற்காக வந்தான்" என்று வியந்து வினவியதும், அதற்கு அவ்வயோத்திமன்னன் "உன்னைப்பார்க்க வேண்டுமென்ற ஆசையினால் வந்தேனே யல்லாமல் காரணம் வேறொன்றுமில்லை" என்று மெல்லப் பதிலுரைத்ததும், இனிவரும் நான்கு செய்யுள்களில் அடங்கியிருக்கின்றன.

ஆமை முதுகி லலவன் றுயில்கொள்ளும்
காமர் நெடுநாடு கைவிட்டு—வீமன்றன் [ழுங்கூற்ற
பொன்னகரி சென்றடைந்தான் போர்வேட் டெ
மன்னகரி யொன்றுடையா னாங்கு. 50

பதப்பிரிவு:—ஆமை முதுகில் அலவன் துயில் கொள்ளும் காமர் நெடு நாடு கைவிட்டு வீமன்தன் பொன் நகரி சென்று அடைந்தான் போர் வேட்டு எழும் கூற்றம் அன்ன கரி ஒன்று உடையான் ஆங்கு.

அன்வயம்:—போர்வேட்டு எழும் கூற்றம் அன்ன கரிஒன்று உடையான், ஆமை முதுகில் அலவன் துயில்கொள்ளும் காமர் நெடுநாடு கைவிட்டு வீமன் தன் பொன்னகரி சென்று அடைந்தான். (ஆங்கு என்பது அசை.)

பதவுரை.

போர் - சண்டையை
வேட்டு - விரும்பி
எழும் - எழுகின்ற
கூற்றம் - யமனை
அன்ன - போன்ற
கரி - (பட்டத்து) யானை
ஒன்று - ஒன்று
உடையான் - உடையவனாகிய இருதுபன்னன்,
ஆமை - ஆமையினுடைய
முதுகில் - முதுகின்மேல்
அலவன் - நண்டுகள்
துயில்கொள்ளும் - (அமர்ந்து) நித்திரைசெய்யும்
காமர் - அழகிய
நெடு - பெரிய
நாடு - (கோசல) நாட்டை
கைவிட்டு - விட்டு நீங்கி
வீமன்தன் - வீமராஜனது
பொன் - அழகிய
நகரி - குண்டினபுரத்தை
சென்று - போய்
அடைந்தான் - சேர்ந்தான்.

விரிவுரை:—பரபரப்பும் துறுதுறுப்பும் இல்லாமல் எல்லாம் எங்கும் அமைதியோடு சாந்தமாய் அமர்ந்திருக்கின்ற நாடு கோசலநாடு என்பதைக் காட்டுவதற்கு, 'ஆமை முதுகில் அலவன் துயில்கொள்ளும் காமர் நெடுநாடு' என்று அது வருணிக்கப்பட்டிருக்கிறது. கம்பரும் நாட்டுப் படலத்தில்,

நீரிடை உறங்கும் சங்கம் நிழலிடை உறங்கும் மேதி
தாரிடை உறங்கும் வண்டு தாமரை உறங்கும் செய்யாள்
தூரிடை உறங்கும் ஆமை துறையிடம் உறங்கும் இப்பி
போரிடை உறங்கும் அன்னம் பொழிலிடை உறங்கும் [தோகை

என்று அந்நாட்டின் அமைதியை அழகாக வருணித்திருக்கின்றார். அத்தகைய அமைதிநிறைந்தவொரு தேயத்திற்கு அரசனாயிருக்கின்ற இந்த இருதுபன்னன்மாத்திரம் அதனுடைய தன்மையைச் சிறிதும் பெற்றவனாகாமல், தமயந்திக்கு இரண்டாம் சுயம்வரம் என்ற வார்த்தையைக் கேட்டவுடன் விரைவிரைந்து தன் அமைதியிழந்து, "மற்றிதற்கு என்செய்கோ!" எனப் புறப்படல் ஆயினனே என்பதை எண்ணிப் புகழேந்திப்புலவர் புன்னகை புரிபவர்போல், காமர்நெடுநாட்டைக்கைவிட்டான்என்று குறிக்கின்றார். நாடு என்பது இங்கு அந்நாட்டின் தன்மைக்குப் பதிலாகநிற்கின்றது. நாட்டைக் கைவிட்டான், என்றதால் அந்நாட்டிற்கு இயற்கையாய் உள்ள அமைதிக் குணத்தைக் கைவிட்டு இருதுபன்னன் புறப்பட்டான் என்பதை உணரலாம். அப்படிக் கைவிட்டு அவசரத்தால் ஒரு கருமத்தை எண்ணாது துணிபவர்களுக்குக் கிடைக்கும்கதி நம் இருதுபன்ன மகாராஜனுக்கும் கிடைக்கின்றது. "என்மேல் எறிகின்ற மாலை எழில் நளன்தன் முன்னே விழுந்தது காண் முன் நாளில், அன்னதற்குக் காரணந்தான் ஈது" என்று ஏமாப்புடன் முன் நளனுக்குச் சொன்ன சொற்களில் இப்பொழுது கட்டுண்டு தவிக்கவேண்டிய பேதையாய் முடிந்திருக்கின்றான்.

வெற்றித் தனித்தேரை வீமன் பெருங்கோயில்
முற்றத் திருத்தி முறைசெய்யும்—கொற்றவற்குத்
தன்வரவு கூறப் பணித்துத் தனிப்புக்கான்
மன்விரவு தாரான் மகிழ்ந்து. 51.

கருத்து:—வீமனது அரண்மனைவாயிலில் தேரை நிறுத்தி அவனுக்குத் தன்வரவைக் கூறச்செய்து இருதுபன்னன் உள்ளே சென்றான்.

கன்னி நறுந்தேறன் மாந்திக் கமலத்தில்
மன்னித் துயின்ற வரிவண்டு—பின்னையும்போய்
நெய்தற் கவாவு நெடுநாட நீயென்பால்
எய்தற் கவாவியவா றென். 52.



பதப்பிரிவு:— கன்னி நறும் தேறல் மாந்தி கமலத்தில் மன்னி துயின்ற வரி வண்டு பின்னையும் போய் நெய்தற்கு அவாவும் நெடு நாட நீ என்பால் எய்தற்கு அவாவிய ஆறு என்.

பதவுரை

கன்னி - புதிய
நறும் - வாசனையுடைய
தேறல் - தேனை
மாந்தி - குடித்து
கமலத்தில் - தாமரையில்
மன்னி - பொருந்தி
துயின்ற - உறங்கிய
வரி - கோடுகளை உடைய
வண்டு - வண்டானது
பின்னையும் - மறுபடியும்
போய் - போய்
நெய்தற்கு - நெய்தல் மலரிற்கு
அவாவும் - ஆசைப்படும்
நெடு - பெரிய
நாட - கோசல நாட்டு அரசனே,
நீ - நீ
என்பால் - என்னிடம்
எய்தற்கு - வருவதற்கு
அவாவிய - விரும்பிய
ஆறு - விதம்
என் - என்ன? என்று வீமன் இருதுபன்னனைக் கேட்டான்.

விரிவுரை:—தமயந்தி தனக்கு இரண்டாம் சுயம்வரம் என்று இருதுபன்னனை வரச்செய்தசூழ்ச்சியும் நோக்கமும் அவள் தந்தை முற்றும் அறியானாயினும் ஒரு சிறிதேனும் உணர்ந்திருப்பானோ யாதோவென்று நினைக்கும்படி இச்செய்யுளில் அவன் இருதுபன்னனை விளிக்கின்ற சொற்கள் அமைந்திருக்கின்றன. "தாமரையின் தேனைக்குடித்துச் சவுக்கியமாக நித்திரை செய்துகொண்டிருந்த வண்டு, அதனின்று எழுந்து நெய்தல்மலரிலுள்ள தேனிற்கு ஆசைப்பட்டுப்போகின்ற தன்மைவாய்ந்த நாட்டையுடையவனே" என்று இருதுபன்னனை வீமன் அழைக்கின்ற இவ்வாசகத்தில் உள்ளுறை உவமை ஒன்று அடங்கியிருக்கலாம். ஆனால் ஒரு வித்தியாசம். கோசலநாடோ அமைதியுடைய நாடென்பதும் அதன்கண் வசிக்கின்ற ஜீவன்கள் தாம் இருக்கும் இடத்திலேயே இருக்கின்ற இன்பங்களை அனுபவித்துச் சுகமாக இருக்கும் குணத்தை யுடையனவென்பதும் யாவரும் அறிந்திருப்பர். வீமனுக்கும் அது தெரிந்திருக்கும். ஆயினும் அந்த இயற்கைக்குமாறாக வரிவண்டு இங்கு நெய்தலுக்கு அவாவுவதாகக் கூறப்பட்டுள்ளது. இது தான், இக்காலம் எல்லாம் அவலமாய்ப் போவதற்குக் காரணமாய் அமைந்ததென்று தாயுமானவர் கூறியிருக்கும் "ஒன்றைவிட்டு ஒன்றைப் பற்றுகின்ற" குணம். இந்தக்குணம் கோசலதேசத்திற்கு இல்லையென்பது தெரிந்திருக்கவேண்டிய வீமன் அஃது இருப்பதாகக் கூறுவானேன்! இருதுபன்னன் தமயந்திக்கு அவாவித்தான் வந்திருக்கின்றான் என்பதை வீமன் ஒருவாறு ஊகித்திருந்தானென்பது உண்மையெனக் கொள்வோமாயின் அவன் இவ்விதம் உரைப்பது இயற்கையாம். கோசலநாட்டு அரசன் ஒன்றைவிட்டு ஒன்றைப்பற்ற விரைந்து வந்துளான். அரசன் எவ்வழி அவ்வழி குடிவழி, என்ற நியாயத்திற்கிணங்க, இதுவரையில் தத்தம் நிலையில் தாம்தாம் பிறழாது சீவகோடிகள் யாவும் அமைதியோடு வைகிய கோசலநாடு, இவ்வரசன் ஆட்சிக்குள்வந்தவுடன் தன் தன்மைமாறி அமைதியற்று யாவும் திரிதரப் புகுந்திருக்கவேண்டும் என்று ஊகித்து வீமன் இவ்விதம் அந்நாட்டை வருணித்திருப்பினும் இருக்கலாம். சாதாரணமாக நாட்டினுடைய தன்மையைத் தலைவன் மீது சார்த்துவது உள்ளுறை உவமையின் இலக்கணம். இங்கேயோ தலைவன் தன்மையை நாட்டிற்குச் சார்த்திப் பேசிய நுண்ணியதொரு நயத்தைக்காண்கின்றோம்.

இவ்வாறு நாம் அமைதிபெறப் பொருள்கொள்ளாமற்போனால், 'ஆமை முதுகில் அலவன் துயில்கொள்ளும் நாடு' என்று முன் புகழேந்தி உரைத்ததற்கும், "வரிவண்டு பின்னையும் போய் நெய்தற்கு அவாவும் நெடுநாடு" என்று வீமன் உரைப்பதற்கும் முரண் ஏற்படும்.

சுயம்வரத்திற்குத் தான் வந்திருப்பதாகக் கருதியிருக்கும் இருதுபன்னனை, "நீ எதற்காக வந்தனை" என்று வீமன் வினவியபோது பதிற்சொல்ல முடியாமல் அவன் நாக்கு வறண்டுபோ யிருக்கவேண்டும். இருப்பினும் அவன் உலர்ந்தவாயைச் சிறிது நனைத்துக்கொண்டு தாழாமல் பதிலுரைத்தான்.

இன்றுன்னைக் காண்பதோ ராதரவால் யானிங்ஙன்
மன்றன் மலர்த்தாராய் வந்தடைந்தேன்—என்றான்
ஒளியார்வேற் கண்ணாண்மே லுள்ளந் துரப்பத்
தெளியாது முன்போந்த சேய். 53.

பதப்பிரிவு:—இன்று உன்னை காண்பது ஓர் ஆதரவால் யான் இங்ஙன் மன்றல் மலர் தாராய் வந்து அடைந்தேன் என்றான் ஒளி ஆர் வேல் கண்ணாள் மேல் உள்ளம் துரப்ப தெளியாது முன்போந்த சேய்.

அன்வயம்:—ஒளி ஆர் வேல் கண்ணாள்மேல் உள்ளம் துரப்பத் தெளியாது முன்போந்த சேய், "மன்றல் மலர்த் தாராய், இன்று உன்னைக் காண்பது ஓர் ஆதரவால் யான் இங்ஙன் வந்து அடைந்தேன்" என்றான்.

பதவுரை.

ஒளி - பிரகாசம்
ஆர் - பொருந்திய
வேல் - வேலைப்போன்ற [பால்
கண்ணாள்மேல் - கண்ணையுடைய தமயந்தியின்
உள்ளம் - கருத்தானது
துரப்ப - செலுத்த (அதனால்)
தெளியாது - ஆராயாது
முன்போந்த - முன் வந்த
சேய் - குமரவேள் அனைய இருதுபன்னன்,
"மன்றல் - வாசனைபொருந்திய
மலர் - மலர்களால் தொடுத்த
தாராய் - மாலையை அணிந்த வீமராஜனே,
இன்று - இன்றைக்கு
உன்னை - உன்னை
காண்பது - பார்க்கவேண்டுமென்றதாகிய
ஓர் - ஒரு
ஆதரவால் - விருப்பத்தால்
இங்ஙன் - இவ்விடத்தில் (அல்லது இவ்விதம்)
வந்து - வந்து
அடைந்தேன் - சேர்ந்தேன்"
என்றான் - என்று இருதுபன்னன் கூறினான்.

விரிவுரை:—நகரி யொன்றும் அலங்கரித்திருக்கப் பெருமையாலும், 'எங்கு வந்தனை' என்று வீமன் கேட்ட கேள்வியாலும் பித்தன் தான் என்னகாரியம் செய்தானென்பது இருதுபன்னனுக்கு வெட்ட வெளியாயிருக்கும். ஒருவனிடத்தில் பணம் கடன் வாங்கிப்போகலாம் என்று வந்தவன், தான் வந்த காரியம் பயன்படாதென்பதைக் குறிப்பினால் தெரிந்து கொண்டுவிடுவானானால், 'நீ எங்கு வந்தாய்' என்று கேட்டதற்குப்பதிலாய், "ஒன்றுமில்லை, சும்மா, உன்னைப் பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன், அவ்வளவுதான்" எனச் சொல்கின்ற மாநுட இயற்கைக்குப் பொருந்தியிருக்கின்றது இருதுபன்னன் இங்குச் சொல்கின்ற சொற்களும். திடீரென்று முன்பின் சொல்லாமல் தூதும்போக்காமல் ஒரு தேசத்தரசன் இன்னொரு தேசத்தரசனைப் பார்ப்பதற்கு ஆசைப்பட்டு வந்துநின்றான் என்பது நம்பத்தகுந்ததன்று. ஆயினும் வேறு என்ன சொல்வான் பாவம் அயோத்திமன்னன். தன் பாகன் அருகில் இருந்திருப்பானானால் அவன் முகத்தைத்தான் பார்க்கத்தரியாது தவித்திருப்பான்.

# கம்பராமாயணம்

## பாலகாண்டம்

### 11. குலமுறை கிளத்து படலம்

பேயு முரைத்ததோர் தூய தத்துவம்

முனிவர ரிருவர் தத்தமக்குரிய திறத்தினால் மநு குலத்தவர் மரபு நடந்தவிதம் வேறுவேறுபடப் பேசநேர்ந்த பரிசினை முன்னரிங்கு நாம் பார்க்கலாயினோம். இனி முதிய தொரு பேய்க்கும் இவ்வாதித்தன் குலமுதல்வர் சரிதத்தைச் செப்புகின்ற செவ்வி வாய்த்துளது. 256 பக்கத் தொடர்ச்சி கம்பருக்கு நிகராகக் கவிசக்கரவர்த்தியெனப் போற்றப்பெறும் சயங்கொண்டார் பாடிய கலிங்கத்துப் பரணியில் அதனைக் காணலாம். அப்பாட்டுடைய தலைவனாய விசயதரன், கதிரோன் குலத்துதித்த பெருந்தகைச் சோழனாதலால், தொல்குல முதல்வரைப்புகழும் ஆற்றால் கவி அவனைப் புகழ்வாராகின்றார். அப்புகழை நூலின்கண் பாடுவது காடமர் செல்வி முன் வந்து இந்திரசாலவித்தைகள் காட்டியவொரு முதுபேயே ஆகும். செண்டு கொண்டு இமையமால் வரையைப் பண்டொரு நாள் திரித்து நிறுத்திய கரிகால் வளவன்முன், காலம் மும்மையும் உணர்ந்தருள் நாரதன் எனும் கடவுள் வேதமுனி தோன்றித் திருமால்முதல் விஜயதரன் ஈறுகச் சோழராச பரம்பரையை எடுத்தியம்ப வேந்தனும் அக்கதையினை, வியாதமுனிவன் பகர்ந்த பாரதக் கதையைக் கரிமுகக்கடவுள் தன் மருப்பொசித்து மேருவின்மீது வரைந்ததுபோல், இமைய நீள்வரையின் மார்பில் பொறித்தனன். இவ்வண்ணம் நாரத முனிவன் மொழிந்தபடியே கரிகாலன் இமயச்சாரலில் எழுதிய அச்சூரிய மரபுளார் சரிதத்தைத் தொழுது கற்றிருந்ததால் இம்முதிய பேய்க்கு எடுத்திங்கு இயம்புதலியன்றதாயிற்று. இன்னபடி கற்றுவந்து, ஆறுடைய திருமுடியான் அருளுடைய பெருந்தேவிக்கு எதிரே சாற்றிய சாதகத்தினது உரையை நோக்குங்கால் அது, பொருள் ஒன்றுமே நாரதன் எழுதுவித்த கதையினின்று கற்றதென்பதும், வாசகத்தின் அமைப்பு அதனுடையதே யென்பதும் தெரியலாகும். அதனையவ் வலகை கூறும்:—

"ஆதி மாலமல நாபிகம லத்த யனுதித்
தவன்மரீசியெனு மண்ணலை யளித்த பரிசுங்
காதல் கூர்தரு மரீசிமக னாகி வருமக்
காசி பன்கதி ரருக்கனை யளித்த பரிசும்

[யாவற்றிற்கும் முதலான திருமாலின் தூய உந்திக் கமலத்தில் பிரமன் உதித்து, அப்பிரம்மன் மரீசியை அளித்ததும்; அம்மரீசியின் காதல் மிகுந்த மகனாகவந்த காசியபன் விவஸ்வான் என்னும் சூரியனைப் பெற்றதும்...]

அவ்வ ருக்கன்மக னாகிமனு மேதி னிபுரந்
தரிய காதலனை யாவினது கன்று நிகரென்
றெவ்வ ருக்கமும் வியப்பமுறை செய்த பரிசு
மிக்கு வாகுவிவன் மைந்தனென வந்த பரிசும்

[அந்த விவஸ்வானுடைய மகனாகிய மனு உலகத்தைக் காத்துத் தன் அரிய மைந்தனைப் பசுவின் ஒரு கன்றிற்கு ஈடாகச் சராசரங்கள் யாவும் வியக்கும்படி தேர்க்காலில் கிடத்தி நீதி வழங்கின விதமும்; இக்ஷ்வாகு என்பவன் இம்மனுவிற்கு மைந்தனாக வந்ததும்]

இக்கு வாகுவின் மகன்புதல்வ னான வுரவோ
னிகலு ரஞ்செய வருஞ்சய புரந்த ரனெனுஞ்
சக்கு வாயிர முடைக்களிறு வாக னமெனத்
தானி ருந்தபொரு தானவரை வென்ற சயமும்

[இக்ஷ்வாகுவின் மகனான விகுக்ஷியின் மிகவும் வல்லமை பொருந்திய புத்திரன், பகைவருக்குமுன் தன் மார்பைக் கொடுத்துவரும் வெற்றியுடைய, ஆயிரக்கண் இந்திரனைத் தனக்கு ஏறுவாகனமாகக் கொண்டு அசுரரை வென்ற வெற்றியும்]

ஒருது றைப்புனல் சினப்புலியு மானு முடனே
யுண்ண வைத்தவுர வோனுலகில் வைத்த வருளும்
பொருது றைத்தலை புகுந்துமுசு குந்த னிமையோர்
புரம டங்கலு மரண்செய்து புரந்த புகழும்

[ஒரே துறையில் கோபமுள்ள புலியும் மானும் ஒன்றாக நீர் உண்ணும்படி அமைத்த திறலுடையவன் உலகினிடத்தில் வைத்த அருளும், போர்க்களத்தில் புகுந்து முசுகுந்தன் என்பவன் தேவலோக முழுவதையும் காவல் புரிந்து காப்பாற்றிய புகழும்]

கடல்க லக்கவெழு மின்னமுது தன்னை யொருவன்
கடவுள் வானவர்க ளுண்ணவருள் செய்த கதையு
முடல்க லக்கற வரிந்து தசை யிட்டு மொருவ
னொருது லைப்புறவொ டொக்கநிறை புக்க புகழும்

[கடலைக் கடைந்த இனிய அமிர்தத்தை ஒருவன், தேவரான இமையவர்கள் உண்ணும்படி அருளிய கதையும், உடல் கூசாமல் தன் தசையை வெட்டிவெட்டிப் போட்டும் போதாமல் ஒருவன் தானே புறவொன்றிற்குச் சமநிறை ஆகும்படி துலையில் ஏறிய புகழும்]

இன்னோர்க்குப் பின்வந்த சுராதிராஜசோழன் கிள்ளிவளவன் சோழன்செங்கணான் இராஜஇராஜன் முதலியோர்தம் அருஞ்செயலும் பெரும்புகழும் நாரதன் கூறியபடி கரிகாலன் வரைந்துவைத்த மலைநின்று கற்றுயான் இங்கு இயம்புவேனாயினேன்."



இக்கூளியின் கூற்றைக் கருதுங்கால் அது வசிட்டனைப்போல் இரவியின் குலத்தவர் பேரைமாத்திரம் சொல்லும் முறையில் தொடங்கியது. இருப்பினும் அக்குல முதன்மையில் நின்ற கடவுளர் இருடிகளைக் கடந்து மனுமுதலாக அரசரைப்பற்றிப் பேசப்புகுந்தவுடன் அப்பேயும் கோசிகனைப்போன்றே அம்மன்னர் புகழிற்கு உரிய செய்திகளைக் குறித்துவரலாயிற்று. இங்குமுன் எடுத்துரைத்த இவ்வைந்து தாழிசைகளையும் கம்பரது பன்னிரு திருவிருத்தங்களையும் ஒப்புநோக்கின் இவ்விரண்டிற்கும் பொருத்தம் பல காண்பது அருமையன்று. பெரும்பான்மை கோசிக முனிவனும் முதியகூளியும் தாம் குறிக்கின்ற மன்னர்களின் பேரைக் கூறுவதில்லை. கூறாததால் கடல் கடைந்து அமரருக்கு அமுதம் அளித்த வேந்தன் பரிதியின்மரபில் யாவனென்பதைச் சந்தேகத்திற்கு இடமாகவே இருவரும் விட்டனர். காகுத்தன் சிபி இவ்விருவருடைய உலகறிந்த சரிதத்தை இருவரும் மனமகிழ்ந்து கூறினர். முதுபேய் முசுகுந்தன் பெயரையும் செயலையும் பகர்ந்தது, விச்வாமித்திரன் அவன் செயலைமட்டும் சாற்றியுள்ளான்.

இவ்வகை ஒற்றுமைபாய் நடக்கின்ற இவ்விருதிறத்துப் பாசுரங்களும் ஒன்றற்கொன்று உதவியாய்ச் சில நிற்கவும் காணலாம். "ஆதித்தன் குலமுதல்வன்மனுவினையார் அறியாதார்" என்று முனிவன் பேரோடு விட்டதை முதுபேய் அவ்வேந்தன், "மேதினிபுரந்து அரிய காதலனை ஆவினது கன்று நிகர்என்று எவ்வருக்கமும் வியப்ப முறைசெய்து பரிசு" காட்டி முடித்தது. பேய்வாயில் இக்ஷ்வாகுவின் பெயர் மட்டும் வந்திருக்கக் கோசிகன்,

பிணியரங்க வினையகலப் பெருங்காலந் தவம்பேணி
மணியரங்க நெடுமுடியாய் மலரயனை வழிபட்டுப்
பணியரங்கப் பெரும்பாயற் பரஞ்சுடரை யாங்காண
அணியரங்கந் தந்தானை யறியாதா ரறியாதார்

[இரத்தினங்கள் அழுத்திய பெரிய கிரீடத்தைத்தரித்த ஜனகவேந்தனே, பிறவிநோய் அழியவும் இருவினைகள் நீங்கவும் வெகுகாலம் தவங்களைச்செய்து தாமரைமலரிலுள்ள பிரம்மதேவனை வழிபட்டு, ஆதிசேடனைத் தனது படுக்கை இடமாகக்கொண்ட சோதிவடிவாய பரம்பொருளை அவனிடம் வரமாகப்பெற்று எம்மனோரும் கண்டு உய்யுமாறு இப்பூவுலகில் அழகிய ஸ்ரீரங்கக்ஷேத்திரத்தை அமைத்தவனை அறியாதவர்கள் ஒன்றையும் அறியாதவர்களென்றே கருதப்படுவார்]

என்று அந்த வேந்தனது பெருமையின் வாய்மையை எழுத்தொடெழுத்துத் தேனின் இசைந்த பாசுரத்தால் பாடினான். ஆயினும், இவ்வாறு விட்டதைக் கூறியதும் கூறியதை விட்டதும் ஆழ்ந்து கருதற்கொத்த பெருங்கருமமன்று. உண்மையில் இவ்விருவரும் மாறுபடுகின்ற இடங்கள் இரண்டொன்று உள. அவைகளை ஆயப் பயன் உண்டாம்.

தென்னாட்டுப் புலவர்கள் திகழ்ந்திருந்த காலத்தின் எல்லை, ஆராய்ச்சிவல்லுநர்க் கிடையே சங்கையற நிற்கவில்லையாயினும் சயங்கொண்டார் கம்பருக்குப் பிற்காலத்தவரெனத் துணிதல் பிழைத்திடாது. எனின், பரணிபாடியபுலவரது நினைவில் கம்பரது நூலும்பொருளும் நின்றிருத்தலென்பது அமையும். ஆயின், இவ்விருநூல்களுக்கும் பொதுவாயுள்ள இப்பாகத்தில்கம்பர் உரைத்தவகைநின்று சிறிதுமாறி இரண்டொன்று பரணியில் தோன்றுவதை நோக்குங்கால், பின்வந்த புலவர் தம்மனத்தைச் செலுத்தியே மாற்றியுள்ளார் என்று மதிக்கநேர்கிறது. சிபி சக்கரவர்த்தியைப் "புறவொன்றின் பொருட்டாகத் துலைபுக்க பெருந்தகை" என்று உரோமபதன் திருவவதாரப்படலத்திலும், "பறவை மன்னுயிர்க்குத் தன்னுயிரை மாறாக வழங்கினவன்" என்று கோசிகன் இப்படத்திலும், அவன் பறவையை அளித்த பெருமையைச் செப்பினார்களேயன்றி, அவன் அச்செய்கையைச் செய்த விதத்தினை எடுத்து இயம்பவில்லை. உயிரை ஒரு கொள்கையின் பொருட்டு வழங்குவதிலும் அரிய வீரம் யாதெனில் மெய்வருந்தலே யாகும். ஆதலால் சிபி செய்த செயலின் அருமை மிகுதியை நாரதரிடங்கற்ற முதுபேய், "உடல் கலக்கற அரிந்து தசையிட்டும் ஒருவன் ஒரு துலைப் புறவொடுஒக்க நிறைபுக்கவன்" என்றவாற்றால் விளக்குகின்றது. தன்னுடைய தசையைத் தானே அரிந்து அரிந்து இடுவது, ஒரு நொடியில் உயிரை விட்டுவிடுவதனிலும் அரும்பெருங் கருமமென்பதற்கையமிலது. எனினும் இது, கம்பருடைய வாக்கியத்தில் அடங்கியிருந்ததைச் சிறிது விரித்துரைத்ததன்றித் திருத்தியதேனும் முற்றிலும் மாற்றியதேனும் ஆகாது. மற்று, நாரதர் வகுத்த கதையினைக் கற்ற இம்முதுபேயோ கோசிகனுக்குக் கற்பித்த கம்பரை மாற்றித் திருத்தியு மிருக்கின்றதென எண்ணும்வண்ணம் இவ்விருநூல்களிலும் மாந்தாதாவைப்பற்றி மொழிகின்ற இருபாசுரங்களும் சொல்லொன்றால் மாறுபடலாகின்றன.

கம்பர், தானேனும் தன் பாத்திரங்களாயமைந்த மன்னர்களேனும் பிறரேனும் பேசுங்கால், அரசர் தேயத்தை ஆள்வதாகக் கூறுகின்ற வழக்கமில்லை. உலகத்துள உயிர்களுக்கு ஏற்றவோர் உடலாக அமைந்து அவைகளைத்தாங்கி நின்று உதவும் பணியலால் தரணிபர் வேறொன்றும் அறிந்திலர். ஆதலால் "உலகம் ஓம்பினேன்" "பார்காத்தான்", "நாடு அளித்தான்" முதலிய வாசகங்கள் வருவதே காணல்கூடும். சட்டதிட்டமுறைகளால் தன் ஆணைசென்று அரசவைபவம் விளங்க எழும் சின்னங்களோடு நாட்டை 'ஆள்வது' என்னுங் கருத்து உண்மை மன்னரைப்பற்றிக் கம்பர் கொண்டுள கொள்கைக்கு அயலாகும். அயோத்தியா காண்டத்து முதற்படலத்தில் மந்திரம்புக்க தயரதன், "வையம் யான் ஆண்ட ஆண்டு உங்கள் மாட்சியால் ஐயமில் அறுபதினாயிரம்" என்று ஆண்டதாகச் செப்பியதும் முதுமையின் மாறாட்டத்தால் வாய்பிறழ்ந்து நேர்ந்திருத்தல் வேண்டுமென்பது முன்னோர்கட்டுரையில் ஆராயப்பெற்றுளது. தன்னுடைய அதிகாரத்தை முன்வைத்துக் குடிகளை ஆள்வதெனும் எண்ணம் ஒரு அரசனது மனத்துள் புகுமாயின் அன்றே அந்நாட்டின் அமைதியும் மற்றுளநலங்கள் யாவும் சிதைந்தவெனக் கொள்ளலாம். தன்னுடைய ஆற்றலையும் அறிவையும் பொருளையும் செலுத்திக் குடிமக்களைக் காப்பதன்றித் தான் ஆளுமுறையை அரசன் தழுவினன் ஆயின், சிதைவதற்குளநலங்களுள் முதன்மையாயது குடிகளுக்குள் நிலைநிற்கவேண்டிய ஒற்றுமையே யாகும். ஏனெனில், ஜனங்களைத் தம்முள் பிளவுபடப் பிரித்துவைத்தாலன்றி அரசனால் ஆள்வது இயலாதென்பது பிரசித்தம். ஆள்கின்ற அரசன் தன்னுடைய ஆட்சி செல்வதற்காக ஜனங்களில் இரண்டொருவருக்கேனும் இரண்டொரு வகுப்பினர்க்கேனும் அப்போதைக்கப்போது மாறிமாறித்

தன் அதிகாரத்தில் சிறுசிறு பாகம் பரிதானமாய்ப் பகிர்ந்து கொடுத்தே தீரவேண்டும் என்னும் இது இராஜதந்திரத்தில் இன்றியமையாத தொன்றும். அவ்வாறு பகிர்ந்துபெற்ற சுவைகண்டவர் மேன்மேலும் அவாவித் தனக்கோர் தீங்குசெய்ய இயலா வண்ணம் அரசன் மறுதிறத்தார் ஒருவரை இவர்களோடு மாறுபடுத்தி வைத்திருக்க வேண்டுமென்பதும் இராஜ்பதந்திரத்தின் பாலபாடம். ஆதலின் ஆள்கின்ற அரசன்கீழ் அமைந்த மக்கள், ஓரினத்தைச்சேர்ந்தவர் என்னும்பான்மையால் ஒற்றுமையுடன் வாழவேண்டியவர்களா யிருப்பினும், அவ்வியற்கைக்கு மாருக ஒருவரோடொருவர் எக்காரணம்பற்றியேனும் இகலேயே வளர்த்துத் தான்தான் எனத் தனித் தனித் தருக்கித்திரிகின்ற புன்மையராதல் திண்ணம். அவ்வாறிருக்கக் கோசிகன், "புலிப்போத்தும் புல்வாயும் ஒரு துறையில் நீருண்ண உலகு ஆண்டான் உளன் ஒருவன்" என ஓராது உரைத்துவிட்டனன். மாந்தாதா என்னும் அம்மேன்மைபோன் மேலிங்குரைத்தபடி உலகத்தை ஆள்கின்ற செயலும் கருத்தும் உடையவனுயின் துறையில் மானும் மானுமே நீருண்ணவருமாயின் அவைதம்முள்முட்டிப்பொருது அழிந்திடும். இந்தத்தத்துவ மெல்லாம் கருத்துட் கொண்டு கலிங்கத்துப்பரணியில் ஆரணியைப் பாட வந்த முதுபேய், 'ஒரு துறைப்புனல் சினப்புலியும் மானும் உடனே உண்ணவைத்த உரவோன் உலகில் வைத்த அருளும்'' என்று ஆறு மறை முனி கோசிகனை நயம்படத் திருத்தித் தந்தது. ஆட்சி என்னும் அக்கானல்நீர்க் கவாவாது அருளொன்றே தன்பிரஜைகள் மாட்டு அரசன் வைத்திருப்பானுயின் போதும். புலியும் மானும் பருந்துங் கிளியும் தம்முள் மனமொத்து உறவாடும் நன்னிலை பெய்தப்பெறும். அரசனுக்குரைத்த இது தந்தையர்க்கும் ஆசிரியர்க்கும் பிறர் நலம் கருதவேண்டிய நிலையிலுள்ள மற்ற யாவருக்கும் ஒக்கும். நளனைப்பற்றிச் சொல்கின்ற புகழேந்தியும், அவன் "பைங்கிளியும் ஆடற் பருந்தும் ஒரு கூட்டில் வாழ' உலகத்தைத் தனிக் காத்தான் என்று கூறினரேயல்லாது 'ஆண்டான்' என்றுரைத்திலர்.

கோசிகனைக் கூளி இன்னவாறு திருத்திக் தந்தது எனப் பாத்திரங்களை முன்னிட்டுப் பேசும் முறையைச் சிறிது மறந்து, அவர்களை ஆக்கிய புலவர்தம் நிலையை நோக்குங்கால் ஒரு கவிக்கரசு இன்னொரு கவிக்கரசைப் பைபப்பையத் தகைகின்ற பரிசை ஈண்டுக் கண்டவராவோம்.

# மாறன் பாப் பாவினம்.

இந்நூலின் ஆசிரியர் பெயர் காலம் முதலியன ஒன்றும் தெரியவில்லை. பன்னுரொட்டிக்கடுத்த மளிகைமேட்டில் வசிக்கும் ஸ்ரீமான் நாராயணசாமி ரெட்டியார் என்னும் எமது நண்பரொருவர் தாம் கண்ட ஏட்டுப்பிரதி ஒன்றினின்று பெயர்த்தெழுதி இப்பத்திரிகையில் பிரசுரஞ் செய்யுமாறு இதனை உதவினர். இதனிற் காணும் செய்யுள்கள் பல சொற்றிறமும் பொருள்நயமும் பெற்று விளங்கலாலும், குறிப்புரைகள் பல தமிழ்மாணவர்க்கு நற்பயன் தரக்கூடியவாய்த் தோன்றலாலும் தொடர்ச்சியாய் இந்நூலை இவ்விதழ்களில் பிரசுரஞ் செய்துவருவோம்.

இந்நூலைப்பற்றியேனும் அதன் ஆசிரியரைப் பற்றியேனும் ஏதேனும் அறிந்தவர் உளரேல், அவரறிந்ததை எமக்குத் தெரிவிக்க வேண்டுகின்ருேம். இந்நூலின் வேறு பிரதிகள் எவரிடத்திலேனும் இருக்குமாயின் அன்னர் அன்பு கூர்ந்து அதனை எமக்கு அனுப்பித் தருவாரேல் ஒப்புநோக்கிப் பிழைகளைக் களைவதற்குரிய பேருதவி எமக்கு அளித்தவராவர்.

ஆசிரியர்.

## மாறன் பாப் பாவினம்.

### வெண்பா.

ஒரு விகற்பக் குறள்வெண்பா.

திருமகளோ பார்மகளோ தென்னரங்கன் வெற்பில்
வருமகளோ யாரோவிம் மாது.

இது ஒருவிகற்பக் குறள்வெண்பா, அலங்காரம் - சுத்தசந்தயம். பகுதி - இயற்கை. துறை - ஐயுறல். 1

இரு விகற்பக் குறள்வெண்பா.

மாத ரிலவிதழ்போன் மாண்பிற்ருே மாதவனல்
வாஞே ரருந்து மருந்து.

இது இருவிகற்பக் குறள்வெண்பா. அலங்காரம் - அவயவ வுவமை. பகுதி - இதுவுமது. துறை-புணர்ச்சியின் மகிழ்தல். 2

ஒரு விகற்பக் குறள்வெண்பா.

மலைமதிதேன் மாறன் வரைவேல் விழியாள்
முலைவதன நண்பா மொழி.

இதுவும் ஒருவிகற்பக் குறள்வெண்பா. அலங்காரம் - நிரனிறை யுவமை. பகுதி - பாங்கற்கூட்டம். துறை -இயல்பிடங்கூறல். 3

ஒரு விகற்பக் குறள்வெண்பா.

தேர்வலவா வென்ற முகின்முந்திற் செங்கண்மால்
காரகத்தாட் கென்வாச கம்.

இதுவும் ஒருவிகற்பக் குறள்வெண்பா. அலங்காரம்-சுவையினுள் அழுகை . வலிமைப்பற்றிய வழுகை. பகுதி-பெருன்வயிற் பிரிதல். துறை - வலவனெடுகூறல்.

ஆக விவற்றுள், காசு, பிறப்பு, மலர், நாள், என்று நான்குதாரணத்தால் வந்திற்றவாறு கண்டுகொள்க. 4

இருகுற ணேரிசை வெண்பா.

நிலம னிலமனல்வா னீரென் பனவா
யலம லைம னமலன்—புலனைந்தும்
வென்ருர் தொழுமால் விளங்குதிரு விண்ணகரம்
என்ருர்க்கு முண்டோ விடர்.

இது விரண்டு விகற்பத்தா னிரண்டுகுறள் வெண்பாவாய், நடுவுதொடைக்கேற்ற தனிச்சொல்லா லடிமூய்வந்த விருகுறணேரிசைவெண்பா. அலங்காரம்-சொல்லணியினுள் முதலடியு மிரண்டாமடியு மிடைவிடா வடிமுதன் மடக்கு. திணை - பாடாண். துறை - நகரவாழ்த்து. 5

ஒரு விகற்ப விருகுற ணேரிசை வெண்பா.

உலகு புகழரங்கத் துத்தமமெய்ஞ் ஞானத்
திலக ருடன்பயின்று சென்று—புலவீர்



நிலமிசைத்தாழ்ந் தேத்தி னெடுமா லுமக்குந்
தலமிசைப் பேரின்பந் தரும்.

இதுவு மிரண்டுகுறள் வெண்பாவாய் நடுவு தொடைக்கேற்ற தனிச்சொல்லா லடிமூஉயொரு விகற்பத்தான விருகுறணேரிசை வெண்பா. திணை-இதுவுமது. துறை - புலவ ராற்றுப்படை. 6

ஆசிடை நேரிசை வெண்பா.

நாவலன் பின்போந்த நன்னீர்த் திருவரங்கங்
காவலன் பொற்ருளாங் கமலத்தே—பாவலர்தம்
பாமாலை சூட்டாதப் பாமாலை யைபெவஞே
தாமா னிடர்க்களிக்குஞ் சால்பு.

இது, திணை - பாடாண். துறை - பழிச்சினர்ப்பணிதல். அலங்காரம் - தொகை விரி யுருவகம். 7

ஆசிடை நேரிசைவெண்பா.

பூங்கமலக் கோயிலாள் புத்தமுதி னுட்பிறந்தாள்
வீங்கு துணைமுலையாள் வெண்ணகையாள்—ஒங்கு
[புனற்
பொன்னி நடுவுட் பொருண்மார் பகத்தாளென்
சென்னி பிரியாத் திரு.

திணை - இதுவுமது. துறை - கடவுள் வாழ்த்து. அலங்காரம் - பொருட்டன்மை. 8

ஆசிடை நேரிசைவெண்பா.

அருண்மனையா ளாயுவந்த தாழியான் கோடு
பொருதிரைப்பாற் றெள்ளமுதிற் போந்த – திரு
[வரங்கம்
பூம்பதுமக் கண்முகிழ்த்துப் புத்தேளிர் கைதொழ
பாம்பணைமேல் வைகும் பதி. [மால்

திணையுந் துறையு மிதுவுமது. அலங்காரம் - இணையிடை நிலைப்பெயர் நிரனிறை.

இவைமூன்று முதற்குறட் பாவிஞேடு தனிச்சொல்லிடை வேறுபட்டு இரண்டசையானும் ஓரசையானும் ஆசிட் டிரண்டு விகற்பத்தான் வந்த வாசிடை நேரிசை வெண்பா. 9

ஆசிடை யோருவிகற்ப நேரிசை வெண்பா.

சிரந்தா னிழந்தா னயனச் சிரங்கொய்
திரந்தா னிரப்பொழிப்பா யென்ன—வரந்தான்
புரந்தா னிருப்பப் பொருள்வேறுண் டென்னு
பரந்தாலுண் டென்ன பயன்.

இதுவுந் திணையுந்துறையு மது. அலங்காரம் - சுவையினுள் பேதமைபற்றி வந்த நகை. 10

ஆசிடை யோருவிகற்ப நேரிசை வெண்பா.

மாதங்க மூலமெனும் வண்குருகூர் மால்வரையோர்
மாதங்க மஞ்ச வருபோழ்திம்—மாதங்க
மாதங்க வாகுவலை யத்தணைத்து வல்விரைந்தம்
மாதங்கம் வென்ருஞேர் மன்.

இது, பகுதி - வரைபொருட் பிரிவு. துறை - தோழி கூற்று. செவிலிமுன்னிலை களிற்றிடை யுதவிக் கறத்தொடு நிற்றல். அலங்காரம் - சொற்பொருட்பின் வருநிலை.

இவை முதற்குறட் பாவினிறுதிக் கஞோசையானு மீரசையானு மாசிட் டொருவிகற்பத்தான் வந்த வாசிடை நேரிசை வெண்பா. 11

ஒரு விகற்ப வின்னிசை வெண்பா.

காவலர்பொற் காவலர்பொற் காதங் கமழநந்தை
காவலனைக் காவலர்தூய்க் காவலெனக் கற்றுணர்ந்
[தோர்
காவலனே காவலனே காத்தியெனக் கண்டுற்றுங்
காவலகா வென்ஞர்க லா.

இது, திணை-பொதுவியல். துறை பொருண்மொழிக் காஞ்சி. அலங்காரம் - இதுவுமது. 12

ஒரு விகற்ப வின்னிசை வெண்பா.

வாராய்நன் னெஞ்சமே வைகலுநம் பாலிளமை
தீராமுப் பெய்துந் திறமின் றுணர்ந்தனமால்
நாராயணன் புகழே நாடியினி நாஞ்சனனஞ்
சாராத தாராய்தல் சால்பு.

இது, திணை - வாகை. துறை - பொருளொடுபுகறல். அலங்காரம் - சுவையினுள் கல்விபற்றிய பெருமிதம்.

இவையிரண்டு நான்கடியாய்த் தனிச்சொல்லின்றி ஒரு விகற்பத்தான் வந்த வின்னிசை வெண்பா. 13

இரு விகற்ப வின்னிசை வெண்பா.

இவ்வுலகத் தின்பமுவர்த் தெஞ்ஞான்றும் பூமகள்
னவ்வுலகத் தின்ப மதுவே விருப்புற்ருர் [கோ
முந்நீர் வளாக முழுதறினும் வாய்க்கொள்ளா
ருய்ந்நீர வல்லா வுரை.

இதுவுந் திணை - வாகை. துறை-சால்புமுல்லை. அலங்கார மிதுவுமது.

இது தனிச்செரல்லின்றி யிரண்டு விகற்பத்தான் வந்த வின்னிசை வெண்பா. 14

189049

பலவிகற்ப வின்னிசை வெண்பா.

மன்னுயிரேவான்பிரம மாதவனன்றென் றுரைத்தல்
பொய்கொலைகள் ளுண்டல் பொருள்வெளவ லிவ்
மின்றே சிறிய ரிடத்தன விவ்வூழிக் [வனைத்து
கடைக்காலென் செய்யார் கலா.

இது, திணை - பொதுவியல். துறை - முதுகாஞ்சி. அலங்காரம் - பேதைமை பற்றிய நகை. 15

பலவிகற்ப வின்னிசை வெண்பா.

கண்ணனருள் பெற்ருர்நன் கல்வியே செல்வமெ
கொல்லா விரதங் குறிக்கொள்ப வேறுசிலர் [னக்
தீக்கொலையிற் செய்பொருளே செல்வமென நின்
லென்னே யுலகியற்கை யென். [றனரா

திணை - இதுவுமது. துறை - முதுமொழிக்காஞ்சி. அலங்காரம் - சுவையி னிழிவுபற்றிய வழுகை.

இவையிரண்டும் பலவிகற்பத்தான் வந்த வின்னிசை வெண்பா. 16

மூவிகற்ப வின்னிசை வெண்பா.

கோங்கரும்பு போலுங் குவிமுலைக ளாம்பலகத்
தாங்கரும்பு முல்லை யரும்பேய்க்கும்—பூங்குழற்
[குச்
செவ்வாயும் வெண்ணகையுஞ் செண்பகமா றன்
காமார் சுனைக்காவி கண். [சிலம்பிற்

இஃதிரண்டாமடியி னிறுதி தனிச்சொற் பெற்று, மூன்று விகற்பத்தான் வந்த வின்னிசை வெண்பா. அலங்காரம் - தொகை விரி யுவமை. பகுதி - பாங்கற்கூட்டம். துறை - இயல்பிடங் கூறல். 17

இரு விகற்ப வின்னிசை வெண்பா.

நாராய ணாய நமவென்றே நாவீற
ஞேரா யிரமென் றுரைத்தகவிப் பாவமுத
மாராய் பவர்க்கடிமை யாயினேன்—வாரானிங்
கென்பா லொருநாள் யமன்.

இது, மூன்ருமடியி னிறுதி தனிச்சொற் பெற்று, விரண்டு விகற்பத்தான் வந்த வின்னிசை வெண்பா.

இது:— திணை-வஞ்சி. துறை-நெடுமொழி. அலங்காரமுமது. 18

நேரிசை விகற்ப வின்னிசை வெண்பா.

மாதராய் தென்னரங்கன் மால்வரைவாழ் மாதராள்
காம னிரதியெனுங் காட்சியாள்—காமவேள்
பூவாளி யென்பவற்றுண் மன்னுயிருண் பூவாளி
கண்டார் நிறையினை யுண்கண்.

இஃதடிதோறு மொரூஉத் தொடை பெற்று, நேரிசை வெண்பாவிற் சிறிது வேறுபட்டு வந்த, வின்னிசை வெண்பா.

இது, பகுதி- சேட்படை. துறை-அவயவங் கூறல். அலங்காரம்- தொகை விரியுவமை. 19

பல விகற்பப் பஃறொடை வெண்பா.

இமிழ்திரைநீர் ஞாலத் திருளிரிய வான்றோய்ந்
தமிழ்கதிர்வெண் டிங்க ளுடனேயெஞ் ஞான்றும்
வலஞ்செய் சுவண வடவரைபோன் மாடம்
பொலஞ்செய் மதிள்கோ புரஞ்சிகர பந்தி
யிலங்கு மெழிலரங்கத் தெம்பிரான் பல்புகழைப்
பாடினர் பாதமலர் பாடிப் பணிமுடிமேற்
சூடினர்க் குண்டோ துயர்.

இஃதேழடித்தாய் வந்த பலவிகற்பப் பஃறொடை வெண்பா.

அலங்காரம் பலபொருட் கொருபொரு ளுவமை, திணை-பாடாண். துறை- பழிச்சினர்ப் பணிதல். 20

ஒரு விகற்பப் பஃறொடை வெண்பா.

தண்டுழாய் மார்பன் வடமலைசார் தண்புறவின்
* விண்டுழா வோங்கி மிடைகோங்கின் கொம்பருடி
மண்டுகா ருக்க குறுந்திவலை வண்டளவங்
கண்டுகா ரென்று கடுக்கை யுடன்மலர்தல்
பண்டுநங் கேள்வர் பருவங் குறித்ததெனக்
கொண்டதெவ னன்னெஞ்சே கூறு.

இது, திணை - பெருந்திணைப்படலம். துறை - பருவ மயங்கல். தலைவிகூற்று. அலங்காரம் - திரிவதிசயம்.

இஃதாறடியான் வந்த வொருவிகற்பப் பஃறொடை வெண்பா. 21

பல விகற்பப் பஃறொடை வெண்பா.

மாதவனை யெவ்வுள் வழுத்தியமெய்ம் மாதவர்தா
மின்ப முறவெதிர்சென் றீதிறனு மின்பமுடன்
பேரின்ப மெய்துவது மீறிலாப் பேரின்பப்
பொன்னே நிதியந் தருமெனமுன் பொன்னினை
குற்றதையெவ் வாறுரைப்பே னுற்று. [யாட்

இது பொருள்வயிற் பிரிதல். துறை - வாட்டங்கூறல். அலங்காரம் - அவயவி யுவமை. இஃதைந்தடியாயடிதோறு மொருஉத்தொடை பெற்று, பல விகற்பத்தான்வந்த பஃறொடை வெண்பா. 22

ஒருவிகற்ப நேரிசைச் சிந்தியல் வெண்பா.

கேளா திருந்திலேன் கேசவா வென்பதனை
வாளா திருந்திலேன் வாழ்த்தினே—னாளாணர்க்
காளானே னென்னினை யிங்கார்.

இஃதொருவிகற்பத்தான் வந்த நேரிசைச் சிந்தியல் வெண்பா. திணை - வஞ்சி. துறை - நெடுமொழி. அலங்காரம் - பெருமிதஞ்சார்ந்த வுவகை. நெடுமொழிகூறல் 23

இரு விகற்ப நேரிசைச் சிந்தியல் வெண்பா.

திருந்திழையாய் மாறன் றிருவாய் மொழியே
மருந்துபிற விப்பிணிக்கு மாதர் தரும்பிணிக்கு
வாய்ந்த மருந்தென்பார் மடல்.

இது, பகுதி-மடல். துறை-உலகின்மேல் வைத்துக் கூறல். அலங்காரம்-மாட்டேறில்லா ரூபகம், ஏகதேச வுருவகம்.

இஃதிரண்டு விகற்பத்தான்வந்த நேரிசைச் சிந்தியல் வெண்பா. 24

ஒருவிகற்ப வின்னிசைச் சிந்தியல் வெண்பா.

வழிமதுத்தார் மாறன் மணிவரைமேன் மாதர்
விழியெழுதி னுலுமினை வெற்பெழுதி னுலு
மொழியெழுத லாமோ மொழி.

பகுதி-யிதுவுமது. துறை-எழுத வரிதென்றல் அலங்காரம் - இதுவுமது. மாட்டேறில்லாத வேகாங்க ரூபகம் இஃதொரு விகற்பத்தான் வந்த வின்னிசைச் சிந்தியல் வெண்பா. 25

இருவிகற்ப வின்னிசைச்-சிந்தியல் வெண்பா.

சோலை மலையழகர் தோண்மாலை காமுறாமுன்
மாலையா யாமமாய் வைகறையா யல்கிரவின்
றென்னேநீட் டித்த தெவன்.

திணை-பெண்பாற் கூற்று, கைக்கிளை. துறை-இரவு நீடு பருவரல். அலங்காரம்-சுவையினுட் டன்கட் டோன்றிய வறுமைபற்றிய வழுகை. இஃதிரண்டு விகற்பத்தான் வந்த வின்னிசைச் சிந்தியல் வெண்பா. 26

பலவிகற்ப வின்னிசைச் சிந்தியல் வெண்பா.

நாணு நிறையு நறுநுதா அன் மாணிழையா
டந்தவெங் காமத் தழல்கதுவ வெந்து
தருமடன்மா வெற்றந் தரும்.

இது, பகுதி - மடல். துறை - நாணழிவுரைத்தல். அலங்காரம் - ஏகதேசவுருவகம். இது, மூன்றடியாய் ஒரு உத்தொடைபெற்றுத் தனிச்சொல்லின்றிப் பலவிகற்பத்தான் வந்த வின்னிசைச் சிந்தியல் வெண்பா. 27

சவலை வெண்பா.

நாரா யணனே நமவென் றுரைப்பவர்பால்
வாரா தொருநாளும் வல்வினைதான்
சாரா னெருதலையாய்த் தண்டதரன் சாராவாம்
பேராத மாயப்பிறப் பிறப்பு.

இது, சவலைவெண்பா. என்னை? "கனியிருகுறளாய் நான்கடி யுடைத்தாய்த் தனிவரவில்லது சவலைவெண் பாட்டே" என விக்காலத்துள்ளோர் பெயரிட்டு வழங்கும் வேறுபாடெனவுணர்க; அன்றியும், மூதுரையினுள்ளும், "அட்டாலும் பால்சுவை குன்றாதளவலாய்-நட்டாலு நண் பல்லார்..........வெண்மைதரும், என்பது மிப்பாவென வுணர்க. 28

* "விண்டுழா யோங்கி" எனவிருக்கலாம் போலும்.

## மானேஜர் அறிக்கை.

ஸிங்கப்பூர் பினங்கு தென்ஆப்ரிக்கா முதலிய வெளிநாடுகேளிலிருக்கும் நமது சந்தா நேயர்களிற் சிலர் இவ்வருடத்திய சந்தா தோகையை இன்னும் அனுப்பாதிருக்கின்றனர். அந்நாடுகேளுக்கு வி. பி. அனுப்ப இயலாதாகையால், நாங்கள் வி. பி. அனுப்புவோம் என்று எதிர்பார்த்துக்கோண்டு இருக்கின்றார்களோ, யாதோ! தயவு செய்து அவர்கள் உடனே சந்தாவை அனுப்பினால் நலமாம். அல்லது இப்போழுது அனுப்ப இயலாத பக்ஷத்தில் எப்போழுது அனுப்புவார்கள் என்பதையாகிலும் தேரியப்படுத்துமாறு கேட்டுக்கோள்கின்றோம். இரண்டும் செய்யாதபக்ஷத்தில் அன்னவர்க்குப் பத்திரிகை வேண்டும் வேண்டா என்பதை நாங்கள் அறிய மார்க்கமில்லை யாகையால் பத்திரிகையை நிறுத்திவைக்க நேரிடும்.




## அமிர்த குணபோதினி!

இதுபோன்ற நவீன மாதாந்தர ஸஞ்சிகை இதுவரைத் தமிழில் வெளிவாந்ததில்லை. இதிலுள்ள விஷயங்கள் யாவும் வாசிப்பாவர்கள் மனத்திற்குப் புதிபதாகவும் அற்புதமாகவும் புலப்படும். இப்பத்திரிகையில் ஜாதி, மத வித்திபாசமின்றிச் சகல மதஸ்தர்களேயும் களிக்கச் செய்யும் வியாஸங்களைப் பிரதிமாத சஞ்சிகையிலும் காணலாம். மாதிரி காபி ஒன்று வாங்கி வாசித்தபின் பிறர் சிபார்சு இல்லாமல் நீங்களே வாங்குவீர்களென்பது நிச்சயம் பிரதி மாதம் 56 பக்கங்களுடன் வெளிவரும். வருஷ சந்தா ரூபா 1. வெளிநாடு ரூபா 1—4—0.

மாதிரி காபி இனம்.

10-ம் பதிப்பு] **ஆங்கில ஆசான்** [வந்துவிட்டது

[எமது லேடி டிரேட் மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.]




60-நாட்களில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளக் கூடியவிதமாய் அப்பியாசப் பாடங்களாக வகுத்து முன் பதிப்புக்களைவிட அதிக பக்கங்கள் சேர்த்துப் பெரிய எழுத்துக்களில் அச்சிட்டுள்ளோம். இதுவரையில் 53100 புத்தகங்கள் செலவாயிருப்பதாலேயே இதன் மேன்மை விளங்கும். இப்பத்தாம் பதிப்பு ஆங்கில ஆசான்போல் வேறு எந்தப் புத்தகங்களிலிருந்தும் அவ்வளவு சீக்கிரத்தில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள முடியாது. நமது முன்பதிப்புப் புத்தகங்களை வைத்திருப்பவர்கள்கூட 10-ம் பதிப்பைப் பார்த்தால் இதிலும் ஒன்று சட்டாயம் வாங்க வேண்டுமென்று எண்ணுவார்கள். இதில் 1-அணு முதல் 3000-ரூபா வரையில் சம்பளம் வாடகைக் கணக்கு உளது. 800-பக்கங்களுக்கு மேல்கொண்ட அழகிய சீமை கலிகோ பைண்டு விலை ரூபா 2.

தி. இராஜகோபால் முதலியார், 302, தங்கசாலைவீதி, மதராஸ்.



## கலா நிலயம்

1928 வருஷத்திய பிரதிகள் முழுவதும் பைண்ட் செய்தும் செய்யாமலும் எங்களிடம் கிடைக்கும்.

இதிலடங்கிய முக்கியமான கட்டுரைகள் தொடர்ச்சியாய் வந்தன:—சேக்கிழாரும்திருக்கண்ணப்பரும், கம்பராமாயணம், தமிழ்ப்பாடம், அகப்பொருள் வரலாறு, காந்திமதி யென்னும் செந்தமிழ் நாவல், தேவாரமும் ஐந்திணையும், கிரேக்க தத்துவ சாஸ்திரங்களின் விளக்கம், கார்லைல் ரஸ்கின் எமர்ஸன் முதலிய ஆங்கிலப் புலவர் கட்டுரைகளின் மொழி பெயர்ப்பு, இன்னும் பல விஷயங்கள் அவ்வப்போது வந்தவை எண்ணிறந்தன.

விலை:—தபால் சார்ஜ் உள்பட:—

பைண்டு செய்யாதது

உள் நாட்டிற்கு ரூ 8-0-0.
வெளி நாட்டிற்கு 9-8-0.

ஆப்லெதர் கில்டு பைண்டு,

உள் நாட்டிற்கு ரூ. 10-0-0.
வெளி நாட்டிற்கு ரூ. 12-8-0.

புல் காலிகோ கில்டு பைண்டு,

உள் நாட்டிற்கு ரூ. 9-8-0.
வெளி நாட்டிற்கு ரூ. 12-0-0.

வேண்டுவோர் முன்னதாகப் பணம் அனுப்பிக் கேட்கவும்.

மானேஜர்,
11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.



**கம்பராமாயணம், பாலகாண்டம்.**

புதியதோர் வகையினதான ஸ்ரீமான் T. N. சேஷாசலமையர் பதிப்பு. செய்யுள்களுக்குப் பதவுரை கூறாது, பதம் பிரித்தும், தொகை விரித்தும், அன்வயப்படுத்தியும் படிப்பவர் தாமே முயன்று பொருள் தேடுமாறு ஆக்கப்பட்டுளது. கடினமான பதங்களுக்கு உரை சேர்க்கப்பட்டுள்ளது. விலை ரூ. 3-0-0. தபால் செலவு வேறு.

**ஏமாங்கதத்திளவரசன்.**

T. N. சேஷாசலம் ஐயர் இயற்றிய நூல். இலக்கிய நலங்கள் யாவும் துலங்குமோர் காதற்கதை. அன்பின் வன்மையும், வாய்மையின் தூய்மையும், புன்கவி புகுந்து செய்யும் துன்மதிச் சூழ்ச்சியும், வீரனொருவன் மண்மோகமும், இக்கதையை நிகழ்த்திவைக்கும் பெருமையைப் படிப்பவரே அறிவர். விலை ரூ. 1-0-0.

தபால் செலவு வேறு.

**கந்தபுராண வெண்பா.**

வெண்பாப் புலி என்ற புகழ்தாங்கிய ஸ்ரீ தி. சு. வேலுசாமிப்பிள்ளை அவர்கள் இயற்றிய நூல் இது. 6-காண்டங்களும், 5665 செய்யுள்களும் கொண்டது. ஓதுதற்கினிய நேரிசை வெண்பாக்களால் ஆயது. கற்றோர் இதயம் களிக்கச் செய்ய வல்லது. விலை ரூ. 4-8-0.

தபால் செலவு வேறு.

**முருகன், ஓர் உழவன்.**

ஸ்ரீமான் K. S. வெங்கட்டரமணி M.A., B.L. ஆங்கிலத்தில் செய்த நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு. ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரி மொழி பெயர்ப்பாசிரியர். இக்கதையின் அமைப்பும், சொல்லும் வகையும், எளிய நடையும், படிப்பவர்க்குக் களிப்பைத் தரவல்லன. விலை ரூ. 1—8—0.

தபால் செலவு வேறு.

கலா நிலயம்,
வேளாளர் தெரு, புரசைவாக்கம், சென்னை.

இந்தியாவிலும் பர்மாவிலும்

எங்களை நீங்கள் - - -

- தெரிந்துகொள்ள வேண்டாமா!

கௌரவ நடத்தையும், சீக்கிரத்தில் உங்கள் காரியம் ஆக வேண்டியதையும், தகுந்த சாமான்களையும் நாடி வருவீராயின் எங்களிடம் வாருங்கள். வந்து எங்கள் வர்த்தக முறைகளையும் பொருள்களையுங் கண்டு மகிழுங்கள்.

ஒரே விலையாகப் பேரமில்லாது நாங்கள் சொல்லிவிடுவதால் உங்களுக்கு எவ்வளவு சௌகரியம் நாங்கள் செய்கிறோம் என்பதை மறவாதீர்.

கைத்திற வேலையில் தேர்ந்தவர்களால் நாங்கள் செய்து வைத்திருக்கும் வெள்ளிச் சாமான்களின் அழகை வந்து பாருங்கள். அழகொடு உபயோகமும் சேர்ந்து வீட்டிற் கையாள்வதற்கும் வெகுமதியாய்க் கொடுப்பதற்கும் தக்கவை அவை.

உங்கள் ஆதரவை வேண்டுகின்ற

ஸூராஜ்மல் லல்லுபாய் & கோ.,

வைர வியாபாரிகள், நகைகட்டுவோர், பொன் வெள்ளிக் கலன்கள் செய்பவர்.

| | | |
|---|---|---|
| 135, பெரிய பஜார், திரிச்சிராப்பள்ளி. | 134, மோகல் தெரு, ரங்கூன். | 313, எஸ்பளனேட், சென்னை. |

SURAJMAL LALLUBHAI & CO.,

DIAMOND MERCHANTS AND JEWELLERS,

GOLD AND SILVER SMITHS.

| | | |
|---|---|---|
| 135, Big Bazaar, TRICHY. | 134, Mogul Street, RANGOON. | 313, Esplanade, MADRAS. |



## வர்த்தமானம்

கடவுளின் அடிமை:—'இந்தியத்தாய்' என்ற ஒரு நூல் எழுதிய மிஸ் மேயோ இப்பொழுது இந்தியாவைப்பற்றி மற்றொரு புத்தகம் எழுதி வெளியிட்டுள்ளார். அதன்பேர் 'கடவுளின் அடிமை'. இந்நூல் சிறுகதைகளால் ஆயது. ஸ்திரீ தர்மம், உலககுரு, சங்கராசாரியார்திருமுகம், என்ற பல தலைப்புகளைக் கொண்டது. உலககுருவாய் வழங்கும் ஸ்ரீ. ஜெ. கிருஷ்ணமூர்த்தி செய்யும் பிரசங்கங்களையும், சைமன்கமிஷன் முன் வைதிகர்கள்விவாகவயது விஷயமாய்க் கொடுத்த சாக்ஷியங்களையும்ஆதாரமாகக்கொண்டு கன்னிமேயோ இந்நூலை ஆக்கியுள்ளார்.

***

காந்தி அடிகளுக்கு அபராதம்:—அன்னியத் துணிகளைக் கல்கத்தாச் சிரத்தாநந்தர்பார்க்கில் காந்தியடிகள் தீ வைத்த குற்றத்திற்காக நடந்த விசாரணையில் அவருக்கும் மற்ற நால்வர்க்கும் ஆளுக்கு ஒரு ரூபாய் வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. காந்தி அடிகளும் மற்றவர்களும் அப்பீல் செய்வர் என்று தெரிகிறது.

***

அகில இந்திய காங்கிரஸ் கூட்டம்:-சென்றவார இறுதியில் டில்லியில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் நடைபெற்றது. காந்தி அடிகளும், ஸ்ரீ மோத்திலால் நேரு, ஸ்ரீ மாளவியா, ஸ்ரீ சென்குப்தா, ஸ்ரீ ஸ்ரீநிவாஸ ஐயங்கார், ஸ்ரீ ஸி. இராஜகோபாலாசாரியார், அப்துல்கலாம் அஸாத் அவர்கள் முதலிய பலர் விஜயமாயிருந்தனர். இக்கூட்டத்தில் செய்யப்பட்ட தீர்மானங்கள்:—

தொழிலாளர் இயக்கத்தை வளர்த்துவருபவர்களை அரசாங்கத்தார் கைதுசெய்தது, அவர்கள் இனிக் கையாளப்போகும் அடக்குமுறையின் அறிகுறியென்றுகருதி, இக்கூட்டம் அதைக் கண்டிக்கின்றது.

இப்பொழுது கைது செய்யபபட்டவர்களை ஜூரிகளின்முன் மாகாணத் தலைநகர்களில் விசாரிக்கவேண்டுமென்று இக்கூட்டம் வற்புறுத்துகின்றது.

பல்ஷிவிக் மசோதாவைச் செய்துவிட அரசாங்கத்தார் காட்டும் ஊக்கத்தை இக்கூட்டம் கண்டிக்கின்றது. கைதுசெய்யப்பட்ட காங்கிரஸ்காரர்கள் தங்களைக் காத்துக்கொள்ள வக்கீல்வைத்து வாதம்செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது.

இனிக் காங்கிரஸ் செய்யவேண்டிய கருமம் ஏப்ரல் மாதம் 22ந்தேதி பம்பாயில் முடிவு செய்யப்படும்

***

சூளை மில்லில் வேலை நிறுத்தம்:—சென்ற சனிக்கிழமைதினம் சென்னைச் சூளை மில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். சென்ற ஒரு மாதமாகத் தொழிலாளர் லீவு விஷயமாகவும் சம்பள விஷயமாகவும் தங்களுக்குள்ள குறைகளை எடுத்துக் கூறிவந்தனர் என்று தெரிகிறது. தொழிலாளர் இலாக்காக் கமிஷனர் மிஸ்டர் ஸ்லேட்டர் மத்தியஸ்த முயற்சி செய்துவருகின்றார். சூளை மில் அதிகாரி பம்பாயிலுள்ள டைரக்டர்களுக்கு நிலைமையை அறிவித்துள்ளார் என்று தெரிகிறது.

***

வர்ணாச்ரம மஹாநாடு:—சென்றவாரம் வெள்ளியன்று மாலை, சென்னையில் வர்ணாச்ரம மஹாநாடு ஸ்ரீமான் டி. ஆர். இராமசந்திர ஐயர் தலைமையில் கூடியது. தலைவர் வர்ணாச்ரம தர்மத்தின் பெருமையை விளக்கி, ஜனங்கள் இகத்தைத் தேடுவதில் பரத்தை மறந்துவிடலாகாதென்று வற்புறுத்தி, விவாக ஏற்பாடு விஷயத்தில் அரசாங்கத்தார் தலையிட்டுச் சட்டங்கள் செய்தல் கூடாது என்று கூறினார். கூட்டத்தில் விவாக வயது மசோதா கண்டிக்கப்பட்டது.

***

வங்காள மாகாண மஹாநாடு:—மார்ச்சு மாதம் 30-ந் தேதி வங்காள மாகாண மஹாநாடு ரங்பூர் என்னுமிடத்தில் ஸ்ரீ சுபாஷ்சந்திர போஸின் தலைமையின் கீழ் கூடிற்று. தலைவர் கூறியதாவது:—வங்காளம் தன் பெருமையை ஒரே நாளில் எய்த முடியாது. ஆனால் வங்காளம் பெரிய காரியங்களைச் சாதிக்கும் சக்தியைப் பெற்றுளது. வங்காளம் எப்பொழுதும் முற்போக் குடையது. வங்காளிகளைப் புரட்சிக்காரர் என்று சிலர் கூறலாம். அது தவறு. புதியதை வங்காளம் கொள்ளினும் தனது தனித்தன்மை அது விட்டதில்லை. இலக்கிய விஷயத்திலும், மதத்திலும் வங்காளிகள் மாறுதல்கள் செய்தனர். பழைமை பழைமை என்று கொள்ளாது அது புதியதைக் கொண்டது. எனினும்வங்காளம்தன் தனிப்பெருமையை இகழ்ந்து விடவில்லை. வைணவமும் பிராம்மண மதமும் தலையோங்கி வந்தகாலத்தில் ஜாதிமதக் கட்டுப்பாட்டை வங்காளம் எதிர்த்தது என்றாலும் கிறிஸ்திய சமயத்தையோ மற்றச் சமயங்களையோ அது கொள்ளவில்லை. இந்திய சாஸ்திர நூல்களின் தத்துவம் பிர்ம்ம ஸமாஜத்தை ஸ்தாபித்துக் கொண்டது. பெரிய மனிதர்களையும் வங்காளமே தந்தது. விவேகானந்தர் முதலிய பெரியோர் வங்காளிகளே. தேசபந்து தாஸர் அரசியல் உலகத்தில் ஒரு சக்தியாயிருந்தார். அவரது முயற்சியின் பயனாய், நாம்இழந்த தன்நம்பிக்கையும் தன்மதிப்பையும் பெற்றோம். நாம் விடாமுயற்சியுடனிருந்து நமது பிறப்புரிமையானசுயராஜ்யத்தைப் பெறவேண்டும். அதற்கான ஆக்கவேலையை ஊக்கமுடன்செய்யவேண்டும். கதரை நாடெங்கும் பரப்பிச் சுயராஜ்யப் போருக்குத் தயாராகவேண்டும்.

***

இராஜா ஸர். அண்ணாமலைச் செட்டியார்:—காரைக்குடிக்கு அருகிலுள்ள கோயிலூரில் ஏப்ரல் மாதம் 6-ந் தேதியன்று தனவணிக நாட்டார் இராஜா. ஸர். அண்ணாமலைச் செட்டியார் அவர்களுக்கு உபசார விருந்து அளிக்கப்போவதாக அறிகின்றோம்.

***

கலியாணம் :—நாட்டுக்கோட்டைச் செட்டியார் வகுப்பைச்சேர்ந்த ஸ்ரீமாந் அருணகிரி செட்டியாருக்கும், ஸ்ரீமதி டாக்டர் முத்துலக்ஷ்மிஅம்மாள் ஆதரவிலிருந்த சுந்தரியம்மாளுக்கும் மார்ச்சு மாதம் 31-ந் தேதி ஞாயிற்றுக்கிழமைகாலை, சென்னைப் பிரம்மசமாஜக் கட்டடத்தில் பிரம்மசமாஜ முறைப்படி மணம் நடந்தது. மாலையில் ஸ்ரீமான் S. R. M. C. T. ஜம்புலிங்கம் செட்டியார் தம்பதிகளுக்கு ஒரு விருந்தளித்தார். அவ்விருந்திற்குப் பலர் வந்திருந்தனர். விருந்து முடிந்தபின், ஸ்ரீமான் ஜம்புலிங்கம் செட்டியார், "பணம் மிகுதியாய்க் கையில் இராத நாட்டுக்கோட்டைச் செட்டியார் மரபுள வாலிபர்களுக்குப் பெண் கொடுக்கப் பலர் மறுப்பதால் அனேகர் இந்நாள் விவாகமாகாம லிருப்பதாகவும், இந்தத் தீமையை விலக்குவதற்கு ஒருவழி தேடவேண்டுமென்று தாமும் தம்மைப்போன்ற சிலரும் கூட்டங்கள் கூடிமுயன்று வருவதாகவும், பெரியவர்கள் தக்க ஆதரவு தாராமல் பின்னிடுவதால் அம்முயற்சி பயன்படவில்லை யென்றும், இந்நிலையில், அயல் ஜாதியிலிருந்து பெண்கொண்ட இவ் அருணகிரி செட்டியாரவர்கள் அத்தகையபெரியவர்களுக்குத் தக்க வுத்தரம் கொடுத்தாரென்றும்," பாராட்டி, விருந்தினர்களுக்கும் வந்தனம் கூறி ஆங்கிலத்திலும் தமிழிலும் சில சொற்கள் பேசினார்.

***

மாணவர் வேலை நிறுத்தம்:—கல்கத்தாவிலுள்ள சித்திரப்படிப்புச் சாலையில் மாணவர்கள் போதனாமுறையில் திருத்தம் செய்யவேண்டுமென்று அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டதாயும், அதிகாரிகள் அதைக் கவனிக்க மறுத்ததாகவும், அதன்பயனாய் மாணவர்கள் வேலை நிறுத்தம் ஏற்பட்டுள்ளதென்றும் கல்கத்தாச் செய்தி கூறுகின்றது.

KALANILAYAM.
REG. NO. M, 2324.

இதன் விலை ரூ. 2-0-0

## இன்பவாழ்க்கையின் இரகசியங்கள்

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

அழகிய சீமை கலிகோ பைண்டு செய்யப்பட்டது. கண்ணைக் கவரத்தக்க அனேக ஆப்டோன் படங்களுடனும், லயன் பிளாக்குகளுடனும் 400 பக்கங்களுக்குமேல் அழகிய பெதர்வெயிட் பேப்பரில் சுத்தமான எழுத்தில் அச்சிடட்பட்டுள்ளது

உலகத்தில் ஆண்மக்களும், பெண்மக்களும் ஒரேவிதமான அன்புடையவர்களாய் ஒருவர்மீதொருவர் உண்மைக்காதல்கொண்டு ஒருவரையொருவர் மணந்து கூடிக் களிப்புற்று, நற்சந்ததிகளைப்பெற்று, இல்லற நீதிகளை வழுவாமற்செய்து வாழ்ந்துவருவதே இன்பவாழ்க்கையாம்; இத்தகைய வாழ்வை அடைதற்குரிய மார்க்கங்களை உணர்ந்துகொள்வதற்கேதுவாக நம்முன்னோர்கள் அகப்பொருள் நூல்களை, வெளியிட்டிருக்கின்றனர்.

இதில் நமது பூர்வீகச் சாஸ்திரங்களின் சாராம்சங்களும், அகப்பொருள் நூல்களின் கருத்துக்களும் வேறு பாஷைகளிலுள்ள இன்பரச நூல்களின் கொள்கைகளும் இன்பவாழ்க்கையின் இரகசிய முறைகளும், இன்னும் இல்வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகிய அனேக விஷயங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதனை ஒவ்வொரு குடும்பத்தினரும் வாங்கி வாசிக்கலாம்.

**ஆரியன் புக் டிபோ,** நெ. 19, தாண்டவராயமுதலி தெரு, திருவல்லிக்கேணி, மதராஸ்.

---

வெளி வந்துவிட்டது ! வெளி வந்துவிட்டது !

## "ஆனந்தபோதினி" வாரப்பத்திரிகை.

தமிழ் மக்கள் நீண்ட நாட்களாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த "ஆனந்தபோதினி" வாரப்பத்திரிகை வெளி வந்து விட்டது. மத ஆராய்ச்சி தமிழ் மொழி வளர்ச்சி, அரசியல் அறிவு, நவீனமுறையில் விவசாயம், வியாபாரம், கைத்தொழில் முயற்சிக்கான அறிவு வளர்ச்சி சுகாதார அபிவிருத்தி, கிராம முன்னேற்றம், விஞ்ஞான வளர்ச்சி, பெண்கள் முன்னேற்றம், மாணவர் அறிவைப் பெருக்கல், தேச விடுதலைக்காகப் பிரசாரம் செய்தல் முதலிய விஷயங்களோடு விநோத விஷயங்களும் வேடிக்கைப் படங்களும், கற்பனைச் சிறு கதைகளும் படிப்போர் உள்ளங்களைக் கொள்ளைகொள்ளும் முறையில் வெளி வருகின்றன. இன்றே சந்தாதாரராகச் சேருங்கள்.

சந்தா விபரம்:—உள்நாடு வருட சந்தா ரூ. 3. ஆறு மாத சந்தா ரூ. 1-12. வெளிநாடு வருட சந்தா ரூ. 4.
(வெளி நாடுகட்கு 6 மாத சந்தா இல்லை)

**ஆனந்தபோதினி ஆபீஸ், மதராஸ்.**

---

A MOMENTOUS BOOK

# ANCIENT JAFFNA

BY

**Mudaliar C. RASANAYAGAM, C. C. S.**

WITH AN APPRECIATIVE FOREWORD

BY

**Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.**

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit.

**Price Rs. 5-8-0. (V.P. Charges extra)**

*MANAGER:—*

***"KALANILAYAM"***

*11, VELLALA STREET.*

**Purasawalkam, MADRAS.**

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E Kumariah, B.A., B.L. (Editor)